Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 09 திங்கட்கிழமை (24.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 085



















# வவுனியாவில் கடும் மழை வெள்ளத்தில் மூழ்கின கிராமங்கள்

## ஏ–9 போக்குவரத்தும் துண்டிப்பு



(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் முதல் பெய்துவரும் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கை அடுத்து பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன், ஏ-9 வீதி ஊடான போக்குவரத்து உட்பட மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்குமான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மதியம் பொழியத் தொடங்கிய மழை நேற்று முன்தினம் இரவு கடுமையாகப் பொழிந்தது. இதனால் குளங்களுக்கான நீர் வரத்து அதிகமாகிய நிலையில் சமணங்குளம், ஈரப்பெரியகுளம், பூவரசங்குளம் என்பன வான் பாய்கின்றன. அத்துடன் மாவட்டத்தின் பெரிய குளமான பாவற்குளத்தின் நீர் மட்டம் அதிகரித்ததனால அதன் ஆறு வான் கதவுகளும் திறக்கப்பட்டன.

இவ்வாறு குளங்கள் வான் பாய்வதாலும், பாவற்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டதனாலும் பூவரசங்குளம் ஊடான செட்டிகுளம் வீதி கடல் போல் காட்சியளிக்கின்றது. இப்பாதையூடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதிக்கு அருகே உள்ள யூனிற் 2, வாரிக்குட்டியூர், கந்தசாமிநகர், மீடியாபாம், கிறிஸ்தவ குளம், முதலியார்குளம், ஆண்டியா புளியங்குளம் ஆகிய கிராமங்கள் முழுமையாக

19 ஆம் பக்கம் பார்க்க

## மழையுடன் கூடிய காலநிலை தொடரும்

எதிர்வரும் நாட்களிலும் மழையுடன் கூடிய காலநிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. நாடடின் பல பாகங்களிலும் தொடர்ந்தும் மழை பெய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது. சீரற்ற காலநிலை காரணமாக மொத்தமாக 42 பேர் உயிரிழந்துள்ளதுடன், 21 பேர் காயமடைந்துள்ளனர். மேலும், ஒன்பது பேர் காணாமல் போயுள்ளனர். மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக

19 ஆம் பக்கம் பார்க்க

## சுயஇலாப அரசியல் தொடர்பாக மக்கள் தெளிவாக இருக்கவேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

தமது சுயஇலாப அரசியல் நோக்கங்களுக்காக மக்களைக் கஷ்ரப்படுத்தி இயல்புச் சூழலைக் குழப்பும் சக்திகள் தொடர்பாக இளைய சமூகமும், மக்களும் தெளிவாக இருக்கவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாவலர் மணி மண்டபத்தில் நேற்றைய தினம் மதுசாரத்திற்கு எதிரான தமிழர் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இளைஞர் மாநாடு 2012



இல் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தனது உரையில் மேலும தெரிவித்ததாவது,

யாழ். குடாநாட்டில் இன்றுள்ள அமைதியைக் குழப்பி பதட்டமான சூழ்நிலையை ஏற்படுத்தும்

19 ஆம் பக்கம் பார்க்க

## காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மாணவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட பாடசாலை மாணவி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். சுழிபுரம் பராளை வீதியைச் சேர்ந்த தர்சிகா (வயது-11) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மாணவி மூளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர்

19 ஆம் பக்கம் பார்க்க

## குருநகரில் வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

யாழ். குருநகர் பகுதியில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலையடுத்து மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். அரியாலை மற்றும் குருநகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த இளைஞர் குழுக்களுக்கு இடையில் இந்த மோதல் சம்பவம் நேற்று இரவு 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குருநகர் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அன்டன் சுரேந்திரன் (வயது-24) என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மது

19 ஆம் பக்கம் பார்க்க

## ஹலோறஸ்ட் பணியாளரை காணவில்லையென முறையீடு

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் காணாமற்போயுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் அவரது தாயார் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளார். ஹலோறஸ்ட் எனப்படும் கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றுகின்ற நற்குணராஜா சாரங்கன் (வயது-22) என்ற இளைஞரே இவ்வாறு காணாமற் போயுள்ளார். கடந்த 12 ஆம் திகதி வேலைக்காக வீட்டிலிருந்து புறப்பட்ட தனது மகன் இதுவரையில் வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தினரின் புகலிட விண்ணப்பம் கவனமாக ஆராயப்பட வேண்டும்

### யு.என்.எச்.சி.ஆர். தெரிவிப்பு

இலங்கை இராணுவத்தினரின் புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்கள் குறித்து மிகவும் கவனமாக ஆராயப்பட வேண்டும் என்று அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அனைத்துலக அகதிகள் பாதுகாப்புத் தேவைப்படுவோர் தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா உயர் ஆணையம், வழிகாட்டு ஆவணம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.


19 ஆம் பக்கம் பார்க்க

## தேசிய பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

நாடளாவிய ரீதியில் தேசிய பாடசாலைகளிற்கான ஆசிரியர் இடமாற்றம் கடந்த வாரத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி கடந்த 20 ஆண்டுகளாக ஒரே தேசிய பாடசாலைகளில் கடமையாற்றிய 3,100 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை 10 வருடங்களிற்கு அதிக காலமாக ஒரே தேசிய பாடசாலையில் கடமையாற்றிய 9,300 ஆசிரியர்கள் இடமாற்றப்படவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 343 தேசிய பாடசாலைகள் உள்ளன. இப்பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் பல்வேறு காரணங்களிற்காக இதுவரையில் இடமாற்றம் செய்யப்படவில்லை என அமைச்சு தெரிவித்துள்ளது. மாகாணமட்ட பாடசாலைகளில் ஐந்து வருடங்களிற்கு ஒரு தடவை ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.





வவுனியாவில் பெய்து வரும் கடும் மழையை அடுத்து பாவற்குள வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதையும் அதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து செல்வதையும் வவுனியாவிலிருந்து செட்டிகுளம் நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று நீரில் மூழ்கியிருப்பதையும் காணலாம்.

# வடமராட்சி கிழக்கு தேவாலயங்களுக்கு நேற்று முதல் மின் இணைப்புகள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மீள் குடியேற்ற கிராமங்களிலுள்ள தேவாலயங்களுக்கு நேற்றுமுதல் மின்னிணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் விசேட பணிப்பின் பேரில் தாளையடி அந்தோனியார் தேவாலயம், செம்பியன்பற்று வடக்கு செம்பிலிப் நேரியார் தேவாலயம் என்பனவற்றுக்கே இவ்வாறு நேற்று மாலை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் இணைப்புகள் வழங்கப்பட்டன.

கடந்த வாரம் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தலைமையில் அவரது யாழ். அலுவலகத்தில் நடைபெற்ற மின்இணைப்பு வழங்குவது பற்றிய கலந்துரையாட லின்போது வடபிராந்திய மின் பொறியியலாளர் குணதிலகவுக்கு வழங்கிய பணிப்பின் பேரில் இம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் வீட்டுத் திட்டங்களுக்கு வேலைகள் பூர்த்தியாகும் வேளையில் மின் இணைப்புகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை முதல் மணற்காடு சுனாமி மீள் குடியேற்ற கிராமத்திற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (116)

# மின் விளக்குகள் பொருத்துமாறு சந்திரபுரம் மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சந்திரபுரம் கல்வத்து சிவன்கோயில் வீதிக்கு மின்விளக்குகள் பொருத்துமாறு பலமுறை கோரியும் எந்தப் பலனும் கிடைக்கவில்லையெனஅப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இந்த வீதி பலவருடங்களாக மின்விளக்குகள் பொருத்தப்படாது இருளில் காணப்படுகின்றது. இது பற்றி பிரதேச சபைக்கு பல மனுக்கள் கொடுக்கப்பட்ட போதிலும் இதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மின்சாரசபை, மற்றும் பிரதேச சபையினருக்கு அப்பகுதி மக்கள் கையொப்பமிட்டு மனுக்கள் நேரடியாக கொடுக்கப்பட்ட போதிலும் விளக்குகள் வரவில்லை, பிரதேச சபையில் நிதி ஒதுக்கப்படவில்லை என்று காரணங்கள் கூறப்படுகின்றதே தவிர மக்களின் தேவைகள் பூர்த்தியாக்கப்பட வில்லை என தினமுரசுக்கு அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மடத்தடி சந்தியிலிருந்து கல்வத்து சிவன் கோயில் சந்தி வரையான வீதியில் மின்விளக்குகளை விரைவாக பொருத்தித் தரவேண்டும் என சந்திரபுரம் மக்கள் சாவகச்சேரி பிரதேச சபையினரிடம் கோரி நிற்கின்றனர். (இ)

# சட்டவிரோத வலைகள் பயன்படுத்துவதற்குத் தடை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமான வலைகள் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் இரணைமடு, கல்மடுநகர் ஆகிய குளங்களில் நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இதில் சட்டவிரோதமாக தங்கூசி போன்ற வலைகள் பயன்படுத்தப்படுவதால் மீன்வளம் பாதிக்கப்படுவதாக பலராலும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து இவ்வாறுசட்டவிரோத வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடை செய்வதற்கான நடவடிக்கையை கிளிநொச்சி, கரைச்சி வடக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசம் மேற்கொண்டுள்ளது.

இவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ளதாக சமாசத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)


## ஓராண்டு நினைவுகள்



அமரர்

சின்னத்துரை கண்ணகைப்பிள்ளை

தோற்றம்: - 07.06.1930 மறைவு: - 06.01.2012

திதி: - துவாதசி (24.12.2012)

'ராஜபதி'
நுணாவில் மேற்கு
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

(C/2229)


# முத்தையன் கட்டு வான்கதவுகள் திறப்பு

(முத்தையன்கட்டு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முத்தையன் கட்டுக்குளத்தின் இரண்டு வான் கதவுகள் நேற்றுக்காலை திறந்து விடப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் தெரிவித்தார்.

முத்தையன்கட்டுக்குளத்தின் இரண்டு வான்கதவுகளும் 3 அங்குலத்திற்கு திறந்துவிடப்பட்டுள்ளன. மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கும் முகமாகவே இவ்வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதால் மக்களுக்கு எந்த வித பாதிப்பும் இல்லையெனவும் முத்தையன்கட்டுக்குளத்தின் நீர்ப்பாசனப் பிரிவு பொறியியலாளர் ஜி.செந்தூரன் கூறினார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தண்ணிமுறிப்புக்குளத்தின் நீர்மட்டம் ஒரு அடிக்கு உயர்ந்துள்ளதாகவும் செந்தூரன் கூறினார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன்தினம் காலை 6 மணியிலிருந்து நேற்றுக் காலை 6 மணிவரை 63 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் கரை துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 64 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள் ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வவுனிக்குளத்தின் நீர் ஒரு அடி ஒரு அங்குலத்திற்கு வான் பாய்வதாக வவுனிக்குள நீர்ப்பாசனப் பிரிவு பொறியியலாளர் பா.விகர்ணன் கூறினார். வவுனிக்குளத்தில் நேற்று முன்தினம் காலை 6 மணியிலிருந்து நேற்றுக் காலை 6 மணி வரை 45 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.


# சாயிநிலையத்தில் நத்தார் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள திருநெல்வேலி ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நத்தார் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இந்நிலையத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாயலத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி நிகழ்வு ஆரம்பமாவதுடன் தொடர்ந்து யேசுபிரான் பற்றிய பஜனைப் பாடல்கள், நத்தார் தாத்தா வருகை, பால விகாஷ் மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் நத்தார் கீதங்கள் என்பன இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 'அன்புடன் கூடிய சேவை' என்னும் பொருளில் புனித திருக்குடும்ப சபையின் அருட்சகோதரி பொஸ்கோ ஜேக்கப் விசேடசொற்பொழிவு ஆற்றவுள்ளார்.





இனந்தெரியாதோரின் தாக்குதலில் காயமடைந்த காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் திருமாறனை நேற்று முன்தினம் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வைத்தியசாலைக்குச் சென்று நலன் விசாரிப்பதைக் காணலாம்.

# பொதுக் கூட்டம்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற உறுப்பினர் சூ.தே.குலநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெறும். (109)

இவ்வாண்டிற்கான பொலிஸ் பரிசோதனை அணிவகுப்பு நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் இடம்பெற்றது. நுணாவில் சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற, இந்நிகழ்வில் வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா கலந்துகொண்டு பொலிஸ் அணிவகுப்பை ஏற்றுக்கொள்வதையும், பொலிஸாரைப் பரிசோதிப்பதையும், அணி வகுப்பையும் காணலாம். (படங்கள்: ஆர்.இராஜகுமார்)

## இராணுவத்தினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் கிறிஸ்மஸ் நிகழ்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட இராணுவத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இராணுவத்தி[illegible]ல் அமைக்கப்பட்ட 21 அடி உயரமுள்ள கிறிஸ்மஸ் மரத்தைப் பெருமளவிலான மக்கள் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

குறிப்பாக இம்மரம் இராணுவத்தினரின் முயற்சியினால் கட்டப்பட்ட நிலையில் குறிப்பிட்ட உயரத்திற்கு மேல் கட்டப்பட்டபோது அது சென்று முறித்துள்ளதாகவும், அதன் பின்பு அம் முயற்சியைக் கைவிடாது முழுமையாக மரத்தை அமைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து இந்நிகழ்வில் இன்னிசை நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்றது. இதில் பிரபல நம் நாட்டு பாடகர்கள் கலந்து கொண்டனர். (72)

## கலை பண்பாடுகள் மேம்பாடடைய படைப்பாளிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்

### விரிவுரையாளர் அருந்தாகரன்

(வடமராட்சி)

பிரதேசத்தின் கலைபண்பாடு, கலாசார விழுமியங்கள் மேம்பாடடைவதற்கு உள்ளூர் கலைஞர்களையும், படைப்பாளிகளையும் ஊக்குவிக்க வேண்டும் என யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கு. அருந்தாகரன் தெரிவித்துள்ளார்.

செ.செல்வறமணனினால் தயாரிக்கப்பட்ட தெய்வதரிசனம் எனும் இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் வடிவேலர் மணிமண்டபத்தில் வே.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு முதற்பிரதியை வெளியீட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இசையானது மனித வாழ்வியலில் மொழியையும் கடந்து ஏற்றதாழ்வு, குணம், பால், நிறம், உணர்வு ஆகியவற்றைப் பிரதியேற்றம் செய்து உலகில் உள்ள எல்லாவற்றையும் ஒன்றிணைக்கின்ற மகா சக்தியாக விளங்குகின்றது.

இந்த இசையோடு சேர்ந்து உயிர் தருகின்ற முழுமையான ஆத்ம வரிகள் தான் அர்த்தத்தை இசையின் வரிகளில் தருகின்றதுடன் பிரதியுருவாக்கமும் நடைபெறுகின்றது.

நாம் ஒரு சாதாரண தேவாரத்தை கீர்த்தனையோடும் கற்புல நேர்த்தியோடும் பாடினால் அது எங்களுடைய மனசுக்குள்ளே உணர்வு ரீதியான நிறைவினைத் தருகின்றது.

அது எல்லைகள் எல்லாம் கடந்து முடிவற்ற இதயங்களை திறக்கின்ற கதவாகப் பிரவாகித்து நிற்கின்றது.

கவிதைக்கும் இசைக்கும் நெருக்கமான தொடர்புள்ளது. மனிதன் தன்னுடைய வாழ்விலே எதிர்கொள்ளுகின்ற முறையில் தான் தன்னை நெருக்கடிகளில் இருந்து தன்னை விடுதலை செய்து கொள்வதற்கு அற்புதமான ஒரு வழியாக இசையும் இசைமயமான பாடலும் பயன்படுகிறது.

நாட்டில் உள்ள இன குழுமங்களும், பயன்பாடுகளும் ஒன்றோடு ஒன்று பொதுவானவை தான். ஆனால் ஒவ்வொரு இனமும் தான் வாழுகின்ற பண்பாட்டுச் சூழலுக்கேற்ப தனக்கான தனித்துவமான இசை மரபுகளையும் கலை மரபுகளையும் கவிதை மரபுகளையும் உருவாக்கியுள்ளது.

உலகம் முழுவதும் பேரரசுகளின் மாபெரும் தத்துவங்களுக்கும் வாழ்வு நிலைகளுக்கும் இசை ஆணித்தரமான ஒன்றாக விளங்குகின்றது.

தற்போது உள்ளூர் கலைஞர்களை விட்டுவிட்டு வெளியூர் கலைஞர்களை முன்னிலைப் படுத்துகின்ற நிலை எமது மண்ணில் பல இடங்களில் அரங்கேறி வருகின்றது. இந்நிலை மாற வேண்டும் அவர்களையும் ஊக்குவிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (116)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் மத்தியஸ்தர் சபைகள் இல்லை

### மக்கள் சுட்டிக்காட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் மீள்குடியேறி 3 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் பிரதேச செயலகங்களினூடாக முன்னெடுக்கப்படும் மத்தியஸ்தர் சபை இல்லாமையால் இச்சபையின் மூலம் மக்கள் சேவைகளைப் பெறமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 6 பிரதேச செயலகங்கள் உள்ள நிலையில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் மத்தியஸ்தர் சபை அமைக்கப்படும் நிலையில் இங்கு ஒரு மத்தியஸ்தர், சபையும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பிரதேச செயலக பிரிவில் உள்ள மக்களின் சிறிய பிணக்குகள், முறைப்பாடுகள் என்பன மத்தியஸ்தர் சபைகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு ஆராயப்பட்டு தீர்வுகாணக்கூடிய விடயங்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொண்டதுடன் ஏனையவற்றை இச்சபை நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று அதன் மூலம் உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்கிறது.

இச்சபை ஏனைய மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலகங்களில் உருவாக்கப்பட்டு இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில, இம்மாவட்டத்தில் இவ்வாறு மத்தியஸ்தர் சபை இல்லாமையினால் மக்கள் சிறிய பிரச்சினைகளை பொலிஸாரூடாகவே மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராம மட்டங்களில் பல பிரச்சினைகள் நாளாந்தம் நிகழ்கின்ற நிலையில் இவற்றை சுமூகமாக தீர்ப்பதற்கு இம்மத்தியஸ்தர் சபை இருக்க வேண்டியது அவசியமானதாகும் எனத் தெரிவிக்கும் இப்பகுதி மக்கள், சபையை உருவாக்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். (04)

## சுனாமி கோர நிகழ்வு 8 ஆவது ஆண்டு நினைவுகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை லயன்ஸ் கழகம் யாழ்.திருமறைக்கலாமன்றம் ஆகியவற்றின் அனுசரணையில் மீண்டும் எழுவோம் சுனாமிப் பேரலையின் கோர நிகழ்வின் 8 ஆவது ஆண்டு நினைவுகள் புதன்கிழமை காலை 9 மணிக்கு துர்க்காபுரம் சிற்பாலய கலைக்கூடத்தில் நடைபெறவுள்ளது.

2004 டிசம்பர் 26 ஆம் திகதி உலகையே அதிரவைத்த அழிவுப் பேரலை அடுத்து வந்து கொண்டிருக்கும் பூமி அதிர்வுகள், வெள்ளப்பெருக்கு, எரிமலைகளின் சீற்றம், காலநிலை மாற்றம். தொடர்ந்து வரும் இயற்கை அனர்த்தங்கள் எதிர்வு கூறப்படும் அச்சுறுத்தல்கள் இவைகளுக்கு முகம் கொடுப்பது எப்படி? எம்மை பாதுகாப்பது எப்படி? மீண்டும் எழுவது எப்படி? தொடர்பான ஆய்வரங்கு துறைசார்ந்தவர்களால் நிகழ்த்தப்படும்.

தொடர்ந்து சிற்பக்கலைஞர் ஏ.வி.ஆனந்தனின் சிற்பக் கண்காட்சியும், கடந்த இரண்டு தசாப்தகாலமாக மேற்குலக நாடுகள் பலவற்றிலும் காட்சிப் படுத்தப்பட்ட உலக புகழ்பெற்ற பல அரிய சிற்பப் படைப்புக்கள் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

## சர்வதேச மனித உரிமைகள் தினம் – 2012

உறுப்புரை - 21

1. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கு உரிமையுண்டு.

2. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

3. மக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பானது, காலாகாலம் நடைபெறும் மெய்யான தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்தல் பொதுவானதும், சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருத்தல் வேண்டுமென்பதுடன், இரகசிய வாக்கு மூலம் அல்லது அதற்குச் சமமான சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் நடைபெறுதல் வேண்டும்.

## இளைஞர் கோஷ்டி வேலிகளுக்கு தீவைப்பு

கரணவாய் கெருடாவில் கிராமத்தில் இனந்தெரியாத இளைஞர் கோஸ்டி ஒன்று இரவுநேரங்களில் வீட்டு வேலிகளுக்கு தீ வைப்பதால் அக்கிராம மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இரவுவேளைகளில் குறிப்பாக மக்கள் உறங்கிய பின்னர் வீதிகளில் குழுவாகத் திரியும் இனந்தெரியாத இளைஞர் கோஸ்டி அப்பகுதி வீடுகளுக்கு கல் எறிவதுடன் வேலிகளுக்கு தீ வைப்பதாகவும் தெரிவிக்கும் மக்கள் தாம் பயப்பீதியுடன் வாழ்வதாக தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் குறித்து கிராம மக்கள் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (18)

ஆயிரம் பேர்களை வென்றவனைவிட தன்னைத்தானே வென்றவனே பெரிய வீரன். - கௌதம புத்தர்

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சமூகத் தற்கொலையும் தவிர்ப்போம்!

உலகம் முழுவதிலும் நாளாந்தம் ஆயிரக்கணக்கான தற்கொலைகள் நிகழ்ந்து வருவதான புள்ளிவிபரக் குறிப்புகள் அதிர்ச்சி தருவனதான். ஆனால் பிரபலமான சில தற்கொலைகளுக்கே ஊடக வெளிச்சம் கிடைக்கிறது. ஊடகங்கள் தெரிவு செய்து பிரபலப்படுத்தும் செய்திகளால் மறைப்புக்கு உட்படுத்தப்பட்டுவிடும் மற்றைய செய்திகள் பற்றியும், அவை ஏன் மக்களுக்குக் கிடைக்க விடாமல் செய்யப்படுகின்றன என்பதில் உள்ள அரசியல் பற்றியும் அறிஞர்கள் பலர் கவனப்படுத்தி வருகிறார்கள்.

தற்கொலைகளைத் தவிர்ப்பது குறித்து உலகெங்கும் பல ஆய்வுகள் நடக்கின்றன. தற்கொலைகளை ஊடகங்கள் வெளிச்சம் போட்டு காட்டும்போது அவை வேகமாக அதிகரிப்பதாக அந்த ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. "எனவே தற்கொலை செய்திகளை தவிர்த்திடுங்கள்" என்று உலகம் முழுமையுமுள்ள மனநல மருத்துவர்கள் பலர் ஊடகங்களுக்கு உருக்கமான வேண்டுகோளை விடுத்த வண்ணமும் உள்ளனர்.

அண்மையில் ஊடகங்கள் முக்கியப்படுத்திய தற்கொலைச் செய்தி, தென்னிந்திய கர்நாடக இசைப்பாடகி நித்யஸ்ரீயின் கணவரான மகாதேவனின் தற்கொலையாகும். மகாதேவன் நன்கு படித்தவர், பொறியியலாளர், பிரபலமான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ஏன் தற்கொலை செய்து கொண்டார் என்ற கேள்வியைக் கொக்கியாக்ப் போட்டு பரபரப்புத் தேடிய ஊடகங்களின் தேவை ஒருபுறமிருக்க, தற்கொலை முடிவுக்கு மனிதர்கள் எவ்வாறு வந்து சேர்கிறார்கள் என்ற கேள்வி முக்கியமானது.

மகாதேவன் தனது வாகன ஓட்டுனரையும் அழைத்துக் கொண்டு காரில், வாகன 'பற்றரி'யை மாற்றி வருவதற்கென்றே புறப்பட்டிருக்கிறார். சென்றுகொண்டிருந்தபோது, திடீரென வண்டியைத் திருப்பச் சொல்லி, அடையாற்றுப் பாலத்தில் நிறுத்திவிட்டு, ஓடிப்போய் நதியில் குதித்து இறந்திருக்கிறார். அவரது அந்தக் கணநேர முடிவுக்குப் பின்னால் இருக்கும் மனித மனத்தின் புதிரும் கணநேர மாற்றங்களும் விளக்கப்பட முடியாதவைதான். தற்கொலைக்கான எண்ணம் தோன்றும் அந்தக் கணத்தைத் தாண்டிவிட்டால் பிறகு அது நடக்காது, அந்த மனிதர் பின்னர் வெகுகாலம் வாழக்கூடும் என்றே மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

தற்கொலை செய்து கொள்வதற்கு விரக்தி, வேதனை, கைவிடப்பட்ட நிராதரவு நிலை, தோல்வியில் துவண்டுபோதல், பொய்த்துப்போன நம்பிக்கை.... போன்ற பற்பல உணர்வுகள் காரணமாகின்றன. எனினும் முக்கிய காரணங்கள் இரண்டு. சமூக,பொருளாதார காரணிகள் ஒன்று. இரண்டாவது, தனிமனிதனின் மனநிலை மற்றும் குடும்பத்தின் உறவு சிக்கல்கள்!

ஆனால், எல்லாத் தற்கொலைகளிலும் இந்த சமூகத்திற்கு - நமக்கு பங்கு நிச்சயம் உண்டு. இந்த சமூகத்தை, வாழ்வதற்கு முடியாத வகையில் ஆக்கிவைத்திருப்பதில் நாமும்தான் பங்களித்துக் கொண்டிருக்கிறோம். இன்றைய சமூக நடைமுறைகள், சமூக மதிப்பீடுகள் இவை எல்லாம் இதில் பங்கு வகிக்கின்றன.

பரீட்சையில் தோல்வி, காதலில் தோல்வி, குடும்ப உறவுகளில் சிக்கல் போன்றவைக்கு அந்தந்த தனிமனிதர்களின் மனோதிடத்தில் மட்டுமல்ல, நம் சமூக நடைமுறைகள், பண்பாட்டுச்சூழல் போன்றவையும் காரணங்களாகும்.

அன்பு, அரவணைப்பு, மன்னிக்கும் மனோபாவம், மற்றவர் துயர்களைத் தேடியறியும் தன்மை, பிறர்தேவையறிந்து உதவும் தயாளகுணம், கருணை போன்றவைகள் சமூகதளத்தில் மேலெழுந்து வரும் போது வாழ்வு வளப்படுவது மட்டுமல்ல, தற்கொலைகளும் பெருமளவு தவிர்க்கப்படும்!

சகமனிதனின் துன்ப துயரங்களில் அக்கறை கொள்ளாத சுயநலமனிதர்கள் ஒவ்வொருவருமே தங்களைச் சுற்றி நிகழும் தற்கொலைகளுக்கும் சமூக மனிதர்கள் படுகின்ற அவலங்களுக்கும் ஒரு மறைமுக காரணகர்த்தாக்களாக இருக்கிறார்கள் என்பதே உண்மை!

ஆசிரியர்

# அரசுக்கு எதிராக பேசினால் அது குற்றச்செயல் அல்ல!

## தெரிவுக்குழு விசாரணைக்கு கண்டனம்

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு பக்கச்சார்பானது என சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர தெரிவித்துள்ளார்.

சாதாரண வழக்கு விசாரணைகளில் குற்றம் சுமத்தப்பட்டோருக்கு கிடைக்கும் சந்தர்ப்பம் கூட பிரதம நீதியரசருக்கு கிடைக்கவில்லை. நீதி அனைவருக்கும் சமமானதாக அமைய வேண்டும்.

அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவது குற்றச் செயலாக கருதப்படுகின்றது. இது ஓர் மோசமான நிலைமையாகும். சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்திலும் இவ்வாறான நிலைமை காணப்பட்டது.

பத்திரிகை நிறுவனங்கள் முத்திரையிடப்பட்டன. அதிகார மோகத்தில் செய்வதறியாது இவ்வாறு நடந்து கொள்கின்றனர். இந்த அரசாங்கத்தின் வெற்றிக்காக நாம் பாடுபட்டோம்.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் இந்த அரசாங்கத் திற்கு ஆதரவளித்தோம். எனினும், அரசாங்கத்தின் சகல பிழைகளையும் ஏற்றுக் கொண்டு அதற்காக குரல் கொடுக்க நாம் தயாரில்லை.

நீதிமன்றின் சுயாதீனத்தன்மைக்கு களங்கம் ஏற்பட்டால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என எஸ்.எல். குணசேகர தெரிவித்துள்ளார்.

# நீதித்துறையுடனான பனிப்போர் நாட்டின் அபிவிருத்திக்கு குந்தகம்

(கொழும்பு)

நாடாளுமன்றுக்கும் நீதித்துறைக்கும் இடையிலான கெடுபிடி யுத்தம் மேலும் தொடருமாயின், நாட்டின் அபிவிருத்திக்கு குந்தகம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டவாக்கத்திற்கும் நீதித்துறைக்கும் இடையில் தற்போது நிலவுகின்ற நிலைமையினை சுமுக நிலைக்கு கொண்டுவரவேண்டுமாயின் சகலரும் ஒரு அடி பின்செல்ல வேண்டும் என்று முன்னாள் பிரதமரும் நல்லாட்சி மற்றும் உடகட்டமைப்பு வசதிகள் தொடர்பிலான சிரேஷ்ட அமைச்சருமான ரட்னசிறி விக்ரமநாயக்க மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு செய்யாமல் அதனை தொடர்ந்து முன்னெடுக்க முயற்சித்தால் அது பாரிய சிக்கல்களை ஏற்படுத்தும். அத்துடன் இந்த நடவடிக்கையானது நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கு பெரும் இடையூறாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

காப்பற் இடப்பட்ட ஹொரண-இங்கிரிய பொரலுகொட வீதியை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலை மாணவர்களுக்கு தனியான சட்டம் இல்லை

சட்டம் ஒழுங்கு என்பது அனைவருக்கும் சமன். அது யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டும் விதிவிலக்கானது அலல என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் தமது உறவுகளுக்காகவும், உடன் பிறப்புகளுக்காகவும் தீபம் ஏற்றி நினைவு கூருவதற்கு எந்தத் தடையும் இலலை, ஆனால் அதை அவர்கள் தமது வீடுகளில் தான் ஏற்ற வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாவீரர் நாளன்று யாழ். பல்கலைக்கழக வளாகத்திலும், மாணவர் விடுதிகளிலும் தீபம் ஏற்றியுள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பதாதைகளும் அங்கு காணப்பட்டன. விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பு.

போரின்போது கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளுக்காகவே இவர்கள் தீபம் ஏற்றியுள்ளனர். இதனை அனுமதிக்க முடியாது. சட்டம், ஒழுங்கு எல்லோருக்கும் பொதுவானது. மாணவர்கள் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் மீறிய மாணவர்கள் மீதே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பாலியல் சம்பவ விசாரணையில் சுகாதார அமைச்சருக்கு திருப்தியில்லை

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் மூன்று கனிஷ்ட ஊழியர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸ், சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்திடம் ஒப்படைக்க சுகாதார அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

மருத்துவ விநியோகப் பிரிவின் இரண்டு கனிஷ்ட பெண் ஊழியர்களும், தேசிய வைத்தியசாலையின் கனிஷ்ட பெண் ஊழியர் ஒருவரும் 'பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளது என சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் விசாரணைப் பிரிவினர் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எனினும் இந்த விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து தமக்கு திருப்தி ஏற்படவில்லை என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் இந்த விசாரணைகளை பாரபட்சமின்றியும் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாகவும் முன்னெடுப்பதற்காக பொலிஸ், சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்திடம் ஒப்படைத்துள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# புகைக்கும் வாகனங்கள் "அவுட்" பரிசோதிக்க புதிய கருவிகள்

(கொழும்பு)

வாகனங்களை பராமரிப்பது தொடர்பில் மக்களைத் தெளிவூட்டும் திட்டமொன்றை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை காரணமாக சூழலுக்கு பெருமளவு பாதிப்புகள் ஏற்படுவதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிச்சந்திர தெரிவித்தார்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக வாகனங்களிலிருந்து புகை வெளியிடப்படுவதனை சோதனை செய்யும் நடவடிக்கைகளுக்காக 45 புகை சோதனை உபகரணங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகம் கூறினார்.

இந்த உபகரணங்கள் ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. ஜனவரி மாத இறுதிக்கு முன்னர் அனைத்து மாவட்டங்களுக்கும் இநத உபகரணங்களைப் பகிர்ந்தளிக்கவுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

## 'எதுவரை' பேட்டியில் நோயல் நடேசன்

# மாற்று வழிகளை மறைத்து சூனியவாத ஏய்ப்பு அரசியல்!



**செம்மறிகள் கூட நல்லாயனை தங்கள் மேய்ப்பனாக இரண்டாயிரம் ஆண்டுகள் முன்பு பெற்ற போது நமக்கு மட்டும் இருபதாம் இருபத்தொராம் நூற்றண்டில் ஏன் இந்த தலைவிதி? என இனியாவது சிந்திக்க வேண்டாமா?**

ஒவ்வொரு சமூகமும் வழக்கமான சிந்தனையோட்டத்தில் இருந்து நவீனமான சிந்தனைக்கு போவது இலகுவான காரியமல்ல. இந்த முன்னெடுத்து செல்ல அறிவுஜீவிகள் தத்துவமேதைகளால்தான் முடியும். நமது மண்ணில் இனவாத நச்சு விதைகள் பலகாலமாக விதைக்கப்பட்டு அவை உயிர்களாகவும் ஊனங்களாகவும் அறுவடை செய்யப்பட்டுள்ளது. அந்த நச்சுச் சூழல் நம்மைச் சூழ்ந்து பல நாள் சுத்தப்படுத்தாத பொதுக் கழிப்பிடம் போல் நாறுகிறது. இலக்கியத்தமிழில் சொல்வதென்றால் புலி போனாலும் கவிச்சி வாடை போகாத மலைக் குகைபோல் - இந்த நிலையில் இலங்கைத் தமிழ் சமூகமாகிய நாங்கள் தற்போது விழுந்திருக்கும் குழியைச் சுற்றிக் கொண்டிருக்காமல் நாம் அதற்குள்ளிருந்து எழும்பி வெளியேற முடியுமா எனப் பார்க்க வேண்டும். அந்தக் குழியை மேலும் ஆழமாக தோண்டக்கூடாது.

வரலாற்றில் பல சமூகங்கள் பல இடர்ப்பாடுகளை யுக்திகளால் கடந்து வந்திருக்கின்றன. இதில் ஆயுதப் போராட்டம் ஒரு பகுதி. அதற்கப்பால் பல வழிமுறைகள் உள்ளன. இவைகள் சாத்தியம் சாத்தியமில்லை என்பதை விட எமது இனத்தை தொடர்ச்சியாக வாழவைக்கக் கூடிய வழிமுறைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். புதிய சிந்தனைகளை மக்கள் மத்தியில் விதைப்பதன் மூலம் மாற்று வழிகளின் சாத்தியத்தை சாதாரண மக்கள் சிந்திப்பதற்குத் தூண்டவேண்டும். இதன் பின்பு அரசியல்வாதிகளுக்கு சமூகத் தலைவர்களுக்கு வேறு வழியில்லை. அவர்கள் அதைக் கையாள வேண்டும் என்ற கட்டாயத்திற்கு தள்ளப்படுவார்கள். அரசியல்வாதிகளில் நல்லவர்கள் கெட்டவர்கள் என்று இல்லை. பதவிக்காக எது இலகுவாக இருக்குமோ அதைச் செய்வது தான் அவர்களது வழக்கம். சிங்கள அரசியல்வாதிகளுக்கு உள்ள வசதி அவர்கள் பெரும்பான்மை மக்கள் மத்தியில் இனவாதத்தைப் பேசி இலங்கையில் ஆட்சிக் கட்டிலில் ஏறமுடியும். அதே போல் தமிழ் அரசியல்வாதிகள் இலகுவாக சிங்கள மக்கள் தமிழர்களுக்கு எதுவும் தரமாட்டார்கள் என ஒரு சூனிய வாதத்தை சொல்லி வாக்குகளைப் பெறுகிறார்கள்.

அமைச்சராக சிலகாலம் மட்டும் இருந்து கிழக்கு மாகாணத்தில்அஷ்ரப் சாதித்த விடயங்கள் தமிழ் அரசியல்வாதிகள் எல்லோரும் சேர்ந்து அரை நூற்றாண்டுகளாக சாதித்த விடயங்களை விட பலமடங்கு அதிகம். இது எப்படி என எமது தலைவர்களைத் தமிழ் மக்கள் கேட்டார்களா? இது வேண்டாம். மலையகத் தமிழர்கள் எவ்வளவு கீழ்நிலையில் இருந்தார்கள்? ஒரு காலம் அவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டது. இப்பொழுது அவர்களின் நிலைமை எவ்வளவோ மேல். இதெல்லாம் இறந்த தலைவர் தொண்டமானால் உயர்த்தப்படவில்லையா? இந்த விடயங்களை மற்றைய சமூகங்கள் சாதித்த போது அங்கு உயிர் இழப்பில்லை. இரத்தம் சிந்தவில்லை. சிறைகள் நிரப்பப்படவில்லை. குண்டுகள் தலையில் விழுந்து பெற்ற பிள்ளைகள் சாகவில்லைத் தானே?

ஒப்பீட்டளவில் இந்த இரு சமூகத்திலும் பார்க்க இலங்கைத்தமிழர் கல்வியில் மேம்பட்டவர்களாக அக்காலத்தில் இருந்தோமல்லவா? எங்கள் கல்வி அறிவு எங்கே கொண்டு போய்விட்டது? அகதி முகாம்களிலும் கடலின் அடியிலும் தானே? இங்கே தவறு யாரில் உள்ளது? நான் கேட்கும் கேள்வியை வெளிநாடுகளில் பாலர் பாடசாலை குழந்தை கூட கேட்கும்.

செம்மறிகள் கூட நல்லாயனை தங்கள் மேய்ப்பனாக இரண்டாயிரம் ஆண்டுகள் முன்பு பெற்ற போது நமக்கு மட்டும் இருபதாம் இருபத்தொராம் நூற்றண்டில் ஏன் இந்த தலைவிதி? என இனியாவது சிந்திக்க வேண்டாமா?

தற்போதைய அரசியல் அமைப்பு விகிதாசாரத்தில் பிரதிநிதிகளை தெரிவு செய்வதால் சிறுபான்மை மக்களை அரசு அணைத்துப் போக வேண்டிய கட்டாயத்திலே வைத்திருக்கிறது. தற்போது 21 அரசியல் கட்சிகளை சேர்த்துதான் இலங்கை அரசு அமைந்துள்ளது. இதன் மூலம் பலரது சம்மதத்துடன்தான் அமைச்சரவை முடிவுகள் ஏற்கப்படுகிறது. தமிழராக நாம் 77ஆம் ஆண்டின் பின்பு வந்த நிலைமையை பயன்படுத்தாதது மிகவும் சோம்பேறித்தனமானது.

மலையகத் தமிழர்களுக்கு தொண்டமானும் இஸ்லாமியர்களுக்கு அஷ்ரப்பும் பின்னால் வந்த தலைவர்களும் இதைப் பயன்படுத்தி வந்தார்கள்.

ஜனநாயகம் என வாய்கிழிய கத்துவதை விட அதில் உள்ள நுட்பங்களை மக்கள் நன்மைக்காகப் பாவிக்கத் தெரிய வேண்டும். எங்கும் அரசியல் அமைப்புகள் கருங்கல்லை - பாறையைப் போன்றவை அல்ல. ஆங்கங்கே பல இடங்களில் மக்களுக்கு பலனளிப்பதை பிரயோசனப் படுத்த வேண்டும். வரிச்சலுகையில் வரும் காரை வாங்கி லாபம் எடுக்கும் தமிழ் அரசியல்வாதிகள் மக்கள் விடயம் என்று வரும்போது "இனவாத அரசு" என்பார்கள்.

இலங்கையில் எந்த அரசாங்கம் வந்தாலும் கொள்கை ரீதியில் எனக்குப் பிரச்சினை இல்லை. காரணம் அரசாங்கம் இலங்கையில் வாழும் மக்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அதில் எப்படிக் குறைகாணமுடியும்? எனது பிறந்த பூமி. அத்துடன் எனது கல்வி - நான் இன்று இருக்கும் நிலை எல்லாவற்றிற்கும் அந்த நாடே பொறுப்பானது. மேலும் அங்குள்ள மக்கள் அரசாங்கத்தைத் தமது விருப்பத்தின் படியாகத் தெரிவு செய்கிறார்கள். அதுவும் ஜனநாயமுறையில். அந்த உரிமையை நான் மதிக்கிறேன். இன்றைய அரசாங்கம் மாறி நாளை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வந்தாலும் எனது நிலை மாறாது.

இலங்கையில் எது செய்தாலும் அரசியலமைப்பை மாற்றுவதற்கு இந்த மூன்றில் இரண்டு பாராளுமன்ற வலிமை அவசியம். அந்த வலிமை ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் பின்பு தற்போதய அரசாங்கத்திடம் உள்ளது. இதன்பின் இலங்கையில் சம்பந்தன் ஜனாதிபதியாக வந்தாலும் அரசியலமைப்பை மீறிச் செய்ய முடியாது.

தற்போதைய ஜனாதிபதியாக இருக்கும் ராஜபக்ஷவிற்கு சிங்கள மக்களிடம் செல்வாக்கு உள்ளது. அந்தச் செல்வாக்கு இன்னும் பலவருடங்கள் நீடிக்கும். இந்த நிலையை அவர் உணர்ந்து உள்ளார். அதனால்தான் எந்த வெளிநாட்டு அழுத்தங்களுக்கும் போர்க்காலத்தில் இருந்து அவர் தலைபணியவில்லை. இவ்வளவு கால இலங்கைப் பிரச்சினைகள் - குவித்து விட்ட கடந்த கால குப்பைகள் என அவரிடம் தள்ளப்பட்டிருக்கிறது. மெதுவாக சுத்தப் படுத்துவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. குறைந்த பட்சம் தமிழர்கள் நிம்மதியாக குழந்தைகளுடன் குடும்பத்துடன் உறங்குவதற்கு யார் காரணம்? ஆனால் ஒரு கை தட்டினால் ஒலி கேட்காது.

இது எனக்கு மட்டுமான பிரச்சினையில்லை. காலம் காலமாக வித்தியாசமான விடயத்தை எடுத்துக் கூறும் போது அதை ஏற்காத தன்மை மக்களிடம் உள்ளது. உலகம் உருண்டை என்று சொன்ன கலிலியோவில் இருந்து இன்று புவி உஷ்ணமாகிறது எனக் கூறுபவர்கள் வரையில் இந்த விதியுள்ளது. தமிழ்ச்சமூகம் வீண் பெருமையும் பழமையும் மட்டும் பேசும் சமூகமாகி இருந்தது.

துரதிருஷ்டவசமாக சமூக அறிஞர்கள்- கல்விமான்கள்- மனவியலாளர்கள் போன்றோரை எமது சமூகம் அதிக அளவில் உருவாக்கவில்லை. அறுபதில் காத்திகேசு மாஸ்டர் போன்றவர்களின் பின்பு இலங்கைத் தமிழ்ச் சமூகம் மீண்டும் சூல் கொள்ளவில்லை. அப்படி ஓர் - இருவர் வரும் சாத்தியத்தையும் விடுதலைப்புலிகள் இயக்கம் கருக்கலைப்பு செய்து சமூகத்தை கடந்த முப்பது வருடமாக மலடாக்கி விட்டது. இப்படியான பாலைவனச் சூழ்நிலையில் நான் மட்டுமல்ல யார் எது சொன்னாலும் புரிவது கஸ்டமாக இருக்கும். அதுவும் நம்மவர்கள் புரியாத விடயத்தை பலமாக எதிர்ப்பார்கள். அல்லது அதற்குப் புது விளக்கம் கொடுப்பார்கள்.

ஆட்சியில் இருப்பவர்களிடம் இருந்துதான் முதல் நல்லிணக்க சமிக்ஞை வரவேண்டும் என்பது கேட்பதற்குச் சரியாக இருந்தாலும் இலங்கை அரசின் மேல் போரைத் துவக்கியவர்கள் தமிழர்கள். 70 ஆரம்பத்தில் தமிழ் அரசியல்வாதிகள் "துரோகிகளுக்கு இயற்கையான இறப்பில்லை" என கர்ச்சித்து அரசோடு சேர்ந்த தமிழர்களையும் அரச ஊழியர்களையும் கொலை செய்வதில் இருந்து தொடங்கிய போராட்டமல்லவா?

அது மட்டுமா? போர்நிறுத்தங்களை முறித்து போரை தொடக்கியது அத்துடன் போரை அப்பாவிமக்கள் மேல் திணித்தது நாமல்லவா?.

ராஜபக்ஷவா இல்லை பொன்சேகாவா மக்களை முள்ளிவாய்க்காலுக்கு கட்டாயமாக அழைத்துச் சென்றது?

இதற்கு உண்மையாக எத்தனை பேர் மன்னிப்பு கேட்டோம். இலங்கை அரசாங்கத்தை விடுங்கள். எந்த முக்கியமான தமிழ் அரசியல்வாதி இஸ்லாமிய மக்களிடம் மன்னிப்பு கேட்டார். இப்படியான நிலையில் அரசாங்கத்திடம் இருந்து முயற்சியை எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத்தனம். நல்லிணக்கம் எல்லோருக்கும் அவசியம். ஆனால் தமிழர்கள் இதயசுத்தியோடு சாதாரண சிங்கள -இஸ்லாமிய மக்களோடு இணையும் போது அரசாங்கம் அந்த விருந்திற்கு வந்தே தீரவேண்டும்.

இருக்கும் இடம்- உயிர்கள்- உறவுகள் என சகலதையும் இழந்த மக்கள் மீண்டும் உயிர்ப்பது இலகுவான விடயமல்ல. சகல காயங்களும் ஆறுவதற்கு ஒரு தலைமுறை செல்லும். இந்த மாதிரியான விடயங்கள் ஜேர்மன்- வியட்னாம்- கம்போடியா என பல நாடுகளில் நடந்திருக்கிறது. நான் அந்த நாடுகளுக்குச் சென்றுள்ளேன். அங்கு சண்டையைத் தெரியாத புதிய தலைமுறை உருவாகி எதிர்காலத்தை மட்டும் சிந்திக்கிறது. அதே போல் நமது மக்களும் இடர்களை கடந்து செல்வார்கள் என்பது எனது நம்பிக்கையாகும். ●

## துப்பாக்கிச்சூடு ஸ்தலத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

அம்பிலிப்பிட்டிய, ஹல்மில்ல கட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 31 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஹகனதுர, வெவல்கொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை அம்பிலிப்பிட்டிய பொலிஸார் மெற்கொண்டுள்ளனர்.

## வரம்பு மீறிச் செல்கிறது நீதித்துறை ஆக்ரோஷமாக சாடுகிறார் வாசு

(கொழும்பு)

நீதிமன்றக் கட்டமைப்பு வரம்பு மீறி அதிகாரத்தைப் பயன்படுத்துவதாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

நீதிமன்றத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் இடையிலான முரண்பாட்டு நிலைமையை ஜனநாயக விரோத சக்திகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நதிமன்றக் கட்டமைப்பு தனது எல்லைகளை புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது அரசியல் சாசன உரிமைகளை இச்சந்தர்ப்பத்தில் விட்டுக்கொடுக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அதற்கு நிச்சயமாக தண்டனை விதிக்கப்பட வேண்டுமென



அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பிலான நியதிகளுக்கு உட்பட்ட வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தாம் இதனை சுட்டிக்காட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற நீதவான்களைக் கொண்டு விசாரணை நடாத்தி அதன் பின்னரே நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை செய்ய வேண்டுமென கோரியிருந்ததாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## 13 அடி நீளமான முதலை கல்முனையில் பிடிபட்டது

(கொழும்பு)

கல்முனை, மருதமுனை பிரதேச கடற்கரையில் நேற்றுமுன்தினம் 13 நீளமான முதலை ஒன்று பிரதேச மக்களால் பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக அப்பகுதி கடலிலிருந்த குறித்த முதலை இன்று கரைக்கு வந்தபோது மக்கள் வலைவீசிப் பிடித்துள்ளனர்.

பிடிபட்டு சில மணி நேரங்களில் இந்த முதலை உயிரிழந்துள்ளது. இது குறித்து பிரதேச வாசிகள் குறிப்பிடுகையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் இப்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் அள்ளுண்டு ஆற்றிலிருந்து கடலுக்கு 3 நாட்களுக்கு முன்னர் இந்த முதலை வந்துள்ளது.

மயக்க நிலையில் கரைக்கு வந்தபோதே பிரதேசவாசிகளின் முயற்சியினால் வலை வீசி இந்த முதலை பிடிக்கப்பட்டது. பிடிபட்டு சில மணிநேரங்களில் அது உயிரிழந்து விட்டது [illegible] அப்பகுதி மக்கள் தெரிவி[illegible]னர்.

## இன்னும் தணியாத இயற்கை அனர்த்தம் இதுவரை உயிர்ப்பலி 35 ஐத் தாண்டியது

(கொழும்பு)

நாட்டில் காணப்படுகின்ற அனர்த்த சூழ்நிலையால் பலியானவர்களின் எண்ணிக்கை 35ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை 9 பேர் காணாமல் போய் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அனர்த்த நிலைமைகள் 18 மாவட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரையில் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை அதிக மழை க்காரணமாக, நுவரெலியா - வெலிமடை பிரதான வீதியில் உள்ள ஹக்கலையில் மண்சரிவு ஒன்று ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்த பாதையின் போக்குவரத்து தற்காலிகமாக பாதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மற்றும் குருநாகலை போன்ற மாவட்டங்களிலும் தொடர்ந்தும் மழை பெய்யும் என்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

## சொத்துக்கள் அபகரிப்பு அரசியல்வாதிகள் மாட்டினர்

### விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

சொத்துக்களை பலவந்தமான முறையில் கைப்பற்றிய அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது,

பொதுச் சொத்துக்கள் மற்றும் தனியார் சொத்துக்கள் இவ்வாறு பலவந்தமாக பறிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய பத்து அரசியல்வாதிகள் விரைவில் இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளனர்.

அரசியல் வாதிகளுக்கு எதிராக பொதுமக்கள் எழுத்து மூலம முறைப்பாடு செய்துள்ளனர். குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்களில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டத்தில் 50 இற்கும் மேற்பட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

## முளை கொள்கிறது புதிய பயங்கரவாத இயக்கம் வெடிகுண்டு பீதி கிளப்புகிறது சிங்கள ஊடகம்

(கொழும்பு)

இளைஞர் புலி அமைப்பு என்ற ஓர் பயங்கரவாத இயக்கமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகையான திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. நாட்டின் முக்கிய பாதுகாப்பு நிலைகள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கில் இந்த இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட இருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

புதிய இளைஞர் புலி அமைபபின் தலைவராகக் கருதப்படும் சுரேஸ் குமார் என்பவர் தமிழகத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். சுரேஸ்குமார், தமிழீழ விடுதலைப் புலிகளின் குண்டுத் தயாரிப்புப் பிரிவில் கடமையாற்றியுள்ளார் என்பது விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

தமிழகத்தில் பயிற்சிகளை வழங்கி அவர்களை இலங்கைக்கு அனுப்பி நாச வேலைகளில் ஈடுபட திட்டமிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு நாடுகளில் வாழும் புலி ஆதரவாளர்களை அழைத்து அவர்களுக்கு வெடிபொருட்கள் தொடர்பில் தமிழகத்தில் வைத்து பயிற்சிகளை வழங்கத் திட்டமிடப்பட்டிருந்ததாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது என திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

## நீதியரசர்கள் பலம் வாய்ந்தவர்கள்

(கொழும்பு)



இலங்கையில் அனைத்து நீதியரசர்களும் பலம் வாய்ந்தவர்களாகத் திகழ்கின்றனர் என்றும் பொது மக்களது உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் நிறுவனமாக நீதிமன்றங்கள் திகழ்வதாகவும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.


ஜனநாயகத்தின் ஸ்திரத் தன்மைக்காக நீதிமன்றம் சுயாதீனமாகவும், அத்தியாவசியமான சாதனமாகவும், இருப்பதாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நீதிமன்ற சேவைகள் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

பல தசாப்த காலமாக பொதுமக்களின் அமைதி மற்றும் உரிமைகளை பெற்றுக்கொடுக்கும் ஒரு நிறுவனமாக நீதிமன்றம் திகழ்கிறது. சட்டத்தின் அடிப்படைத் தன்மையிலேயே அது புரிகிறது. சட்டத்தின் முன்னால் அனைவரும் தராதரம் இன்றி சமனானவர்களாகவே கருதப்படுகின்றனர். எனவே, எந்த ஒருவருக்கும் தமது உரிமைகள் பாதிக்கப்படாத வண்ணம் தமது பாதுகாப்பின் பொருட்டு நீதிமன்றின் முன்னிலையில் நியாயத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் இருக்கின்றது.

இதேவேளை, நீதியரசர்களுக்கு இருக்க வேண்டிய குணநலன்கள் தொடர்பிலும் அவர் விபரித்தார். சமூகத்திற்கு கிடைக்க வேண்டிய நியாயங்கள் தொடர்பில் சட்டத்தரணிகளின் தோள்களில் பாரிய கடமையொன்று இறக்கி வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நீதிமன்ற கல்லூரியின் கொள்கைக்கு அமைய நீதியரசர் ஒருவரிடம் இருக்கவேண்டி குணாதியசங்கள் விளக்கப்பட்டுள்ளன. அதில் பிரதானமானது, நீதிபதிகள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்பதுதான்.

அரசியலால் அவர்களின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுகிறது. நியாயத்தை நிலைநாட்ட முடியாது. இதுதவிர, அண்மைக்காலமாக தமக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்ட நிலைமைகளின் போது ஒன்றிணைந்து செயற்பட்ட நீதியரசர்களுக்கு நன்றி தெரிவித்தார். அதேவேளை, இலங்கையில் உள்ள நீதியரசர்கள் மிகவும் பலம் வாய்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

## இனப்பாகுபாடு காட்டுகிறார் ஹக்கீம் உச்ச நீதிமன்றிற்கு வருகிறது மனு



(கொழும்பு)

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இன ரீதியாக செயற்பட்டதாகத் தெரிவித்து உச்ச நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட உள்ளது. சட்டக் கல்லூரிக்கான நுழைவுப் பரீட்சையின் போது இன ரீதியாக செயற்பட்டதாக அமைச்சர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தேசிய புத்திஜீவிகள் அமைபபின் ஒத்துழைப்புடன் சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வில் தோற்றிய மாணவர்கள் வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளனர்.

சட்டக்கல்லூரி பரீட்சைகள் நியாயமான முறையில் நடத்தப்பட வேண்டுமென 2004 ஆம் ஆண்டு பிரதம நீதியரசர் பரிந்துரை செய்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரவூப் ஹக்கீம், நீதி அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பின்னர் உரிய முறையில் சட்டக் கல்லூரிக்கான அனுமதிகள் மேற்கொள்ளப்படவில்லை.


இன ரீதியான அடிப்படையில் மாணவர் தெரிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அடுத்தடுத்த பரீட்சை எண்களைக் கொண்ட 20 முஸ்லிம் மாணவ மாணவியர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். ரவூப் ஹக்கீம் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டதன் பின்னர் அதிகளவான முஸ்லிம்கள் சட்டக் கல்லூரிக்கு அனுமதி பெற்றுக் கொண்டுள்ளனர் என தேசிய புத்திஜீவிகள் பேரவை குற்றம் சுமத்தியுள்ளது.

## துப்பாக்கிச்சூடு பற்றி எவருக்கும் முறைப்பாடு செய்யாதது ஏன்?

(கொழும்பு)

சட்டத்தரணிகள் சங்கத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷவின் செயற்பாடு குறித்து பொலிஸ் தரப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை விஜயதாஸ ராஜபக்ஷவின் வீட்டின் மீது துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டது. இந்த சம்பவம் இடம்பெற்றவுடன் விஜயதாஸ ராஜபகஷ பொலிஸுக்கோ அல்லது அவசரசேவை இலக்கத்துக்கோ அறிவிக்கவில்லை. அவ்வாறு அறிவித்திருந்தால், துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவர்களை கைது செய்திருக்க முடியும் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் கீழ்
# சண்டிலிப்பாய் மக்களுக்கு உதவிகள்



(கிளிநொச்சி)

தொடரும் அமைதிச் சூழலை தக்கவைத்துக் கொள்வதனூடாகவே மக்களின் வாழ்வு மேம்பாடடையும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் கீழான உதவிகளையும் நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப் படுத்தப்பட்ட நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

கடந்த காலங்களில் யுத்த பாதிப்புக்களை எதிர்கொண்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக அரசு பல்வேறு திட்டங்களினூடாக தொடர்ச்சியாக உதவிகளை வழங்கிவருகின்றது.

இதன் மூலம் மக்கள் தமது வாழ்வாதாரத்தை நகர்த்தி வருகின்றனர் அத்தோடு பிரதேசங்கள் அனைத்தும் துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதோடு உட்கட்டுமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

மேலும் யாழ்.மாவட்டத்தில் பல தசாப்தங்களுக்கு முன் தமது சொந்த மண்ணிலிருந்து வெளியேறிய மக்கள் தற்போது மீள் குடியேறிவருகின்றனர் அண்மைக்காலத்தில் மாதகல் மேற்கு பகுதியும் மீள்குடியேற்றப்பட்டதுடன் சமகாலத்திலேயே அவர்களுக்கான நிரந்தர வீட்டு வசதிகளும் அமைத்துக் கொடுக் கப்பட்டு வருகின்றன.

எனவே இவ்வாறான சூழலை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கவேண்டும். ஏன அவர் மேலும் தெரிவித்தார்.

வலிகாமம் தெற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சுமார் 18 கடற்தொழிலாளர்களுக்கு தலா 7650 ரூபா பெறுமதியான கருவாடு பதனிடும் உபகரணங்களும் 100 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக தலா 6500 ரூபா பெறுமதியான கோழிக்குஞ்சுகளும் கூடுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன் வலிமேற்கு பிரதேசசபை உறுப்பினர் பாலகிருஸ்ணன்(ஜீவன்) வலி தென்மேற்கு பிரதேசசபையின் உறுப்பினர் வெலிச்சோர் அன்ரன்ஜோன்சன்(ஜீவா) சண்டிலிப்பாய் பிரதேசசெயலக உதவித்திட்டப்பணிப்பாளர் நிரஞ்சலா மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# கட்டாக்காலி நாய்களால் அச்சத்துடன் போக்குவரத்து

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்டாக்காலி ஆடு, மாடுகள் ஒரு புறம் அதிகரித்துள்ள நிலையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையும் தற்போது அதிகரித்துள்ளதாகவும் இதனால் வீதிகளில் செல்வோர் நாய் கடித்துவிடுமோ என்ற அச்சத்துடன் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் இவ்வாறு கட்டாக்காலிகளாக திரியும் நாய்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுவதாகவும் இவை வீதிகளிலும் கட்டடங்களுக்கு முன்பாகவும் படுத்துறங்குவதுடன் இடத்தை அசிங்கப்படுத்துவதாகவும் இதனால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை சில நாய்களுக்கு விசர் பிடித்து வீதியில் செல்வோரைக் கடிப்பதாகவும் இதனால் மக்கள் வீதியில் செல்வதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலி நாய் களை கட்டுப்படுத்துவதற்கு உரியவர்கள் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (04)


# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு கோப்பாய் பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலக பொது நூலகத்தின் நூலக நடமாடும் சேவை இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலையத்தில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை இந்நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

# பரமர் சங்கமம்



"அதிஷ்டமென்பது சொல்லிக்கொண்டோ, எதிர்பார்த்தோ வருவதில்லை. எதிர்பாராத நேரத்தில் விபத்துப் போன்று வருவதுதான் அதிஷ்டம்" இவ்விதம் அதிஷ்டலாபச்சீட்டு விற்பனை செய்வோர் விளம்பரம் செய்வதைக் கேட்டுள்ளோம்.

அப்புடியெண்டால் விபத்து ஏற்படுவதும் அதிஷ்டம் என்று சொல்லப்படுகிறதா எண்ட கேள்வி எழுகிறது. அதிஷ்டம் அடிக்கடி எல்லோருக்கும் அடிப்பதில்லை. வாழ்நாளிலே அதிஷ்டம் கிடைக்காதவர் தான் அதிகம்.

அந்த மாதிரி மிகவும் அபூர்வமாக ஏற்படுவதுதான் விபத்து அதனால்தான் போலும் விபத்தையும், அதிஷ்டத்தையும் சேர்த்து முடிச்சுப் போட்டுள்ளனர்.

விபத்துக்கள் எண்டால் மாதங்கள், வருடங்கள் கழிந்து ஒன்று நடக்கும். காலம் மறைந்து இக்காலங்களில் ஒரே நாளில் பல விபத்துக்கள் ஏற்படுவதைப் பத்திரிகைகளில் வாசித்து அறியிறம்.

கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். முதலாம் .குறுக்கு வீதியால் போய்க் கொண்டிருந்தன். வேம்படிச் சந்தியில் பேருந்து ஒன்று குறுக்காக நிறுத்தப்பட்டிருந்தது.

அதில் இருந்த பயணிகள் இறங்கி அவ்விடம் கூட்டத்தில் நிரம்பியது. நெருங்கிப் போனதுந்தான் வேம்படி றோட்டல் சிறு பெண் பிள்ளையை மோட்டார் சைக்கிளில் ஏத்தி வந்த தகப்பனும், பஸ்சுடன் மோதுப்பட்டு கடும் காயங்களுக்கு உள்ளாகி இருவரும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டேண்ட விசயம் தெரிஞ்சுது.

அதுபோல ஒரு வாரம் முன்பாக நாவலர் வீதியில் தரித்து நின்ற வான் கதவைத் திறக்கையில் வீதியில் மோட்டார் சைக்கிளில் சிறு பிள்ளை ஒன்றுடன் பயணித்த தம்பதிகள் கதவுடன் மோதி விபத்துக்கு உள்ளானதாக பத்திரிகைகள் படத்துடன் செய்திகளை வெளியிட்டிருந்தன.

அதற்குப் பின்பாக மல்லாகம் சந்தியில் பொலிஸார் நின்பதைக் கண்ட வான்சாரதி மல்லாகம் நீதிமன்ற வீதியால் திருப்பி வேகமாக தப்பிச் செல்கையில் பிள்ளையுடன் சைக்கிளில் வந்த பெண்ணை மோதி வீழ்த்தி விட்டு தபால்ப் பெட்டியையும் உடைத்துக் கொண்டு மதில் சுவருடன் மோதி நின்றதாகச் செய்திகள் தெரிவித்தன.

சைக்கிளில் பயணித்த பெண்ணும், பிள்ளையும் படுகாயமடைந்து உடனடியாகத் தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று முதலுதவி வழங்கப்பட்டதுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருப்பதாக அச்செய்தி மேலும் தெரிவித்தது.

இதுகளெல்லாம் எதனால் நடைபெறுகிறது? நிதானம் இல்லாத அவசரத்தாலல்லவா? ஏதோ ஒரு காரியமாகவே பயணம் செய்ய நேர்கிறது. இடையில் இத்தகைய சம்பவங்களால் அவைகள் நிறுத்தப்பட்டு எத்தனையோ நாட்கள் வைத்தியசாலைகளில் கழிக்கவேண்டியும் வந்து விடுவதை எப்ப உணரப்போறம்?

1990 களில் இருந்து 2009 ஆம் ஆண்டு வைகாசி 18 ஆம் திகதி வரை மரணங்கள் மலிந்த பூமியாக திகழ்ந்த எமது மண்ணில் அதே வருடம் கண்டி வீதிப்பாதை பாவனைக்குத் திறந்த பின்னால் விபத்துக்கள் மலிந்த பூமியாகிவிட்டது இல்லையே பின்னை....

# திருட்டுச் சம்பவங்கள் முல்லையில் அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் இதனால் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு, கோயில் குடியிருப்பு, சிலாவத்தை, முள்ளியவளை, கள்ளப்பாடு போன்ற கிராமங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதாகவும் இதனால் தாம் எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாதுள்ளதாகவும் இரவு வேளைகள் தாம் விழித்திருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பொருட்கள் மட்டுமல்லாது ஆடு, மாடுகளும் களவாடப்படுவதாகவும் வாழ்வாதாரத்திற்கு இவற்றை வளர்க்கும் மக்கள் இதனால் பெரும் கஷ்டப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே இது குறித்து பொலிஸார் நட-வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (04)

# முரசின் இன்றைய பலன்

(24.12.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 09 ஆம் திகதி. நட்சத்திரம் பரணி, சித்தம் முன்னிரவு 8.16 வரை. திதி ஏகாதசி மரணயோகம் காலை 7.59 வரை. இராகுகாலம் 7.56 - 9.26 வரை. சுபநேரம் 12.26 - 1.596 வரை. கரிநாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பொது நலப்பணிகளில் ஆர்வம். தொழிலில் புதிய உத்தி. பணவரவும், நன்மையும் கூடும். வழக்கு வெற்றி. வாழ்வும் வெற்றி. சோதனையில் தேர்ச்சி. உடல்நலம் சிறக்கும். |
| ரிஷபம் | புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம். பணியில் உத்வேகம். தொழில், கூடுதல் வளர்ச்சி. தாராள பணவரவு. விருந்து உபசரிப்பு. இல்லறத்துணை விரும்பியது செய்வீர்கள். |
| மிதுனம் | இனிய பேச்சால் கவர்வீர்கள். உறவினர் வருகை. குடும்பத்தில் மகிழ்ச்சி. எதிர்ப்பாளர் விலகுவர். தொழில் சிறக்கும். லாபம். மரியாதை கூடும். அரச உதவி. பிள்ளைகளால் அனுகூலம். |
| கடகம் | சிலரது அறிவுரையால் தர்மசங்கம். சகிப்புத் தன்மை மதிப்பை காக்கும். தொழில், பணி தாமதம். வரவை விட செலவு அதிகரிக்கும். குடும்பத்தினர் அன்பு மனதுக்கு நம்பிக்கை தரும். |
| சிம்மம் | தவறாக விமர்சித்தவர்களும் அன்பு பாராட்டும் அனுகூல நிலை. பணியில் மகிழ்ச்சி. தொழில் வளர ஆதரவு. தாராள பணவரவு. புத்திரர் விரும்பியது செய்வீர்கள். சமூக நன்மதிப்பு. |
| கன்னி | சமயோசிதபுத்தி வெற்றி தரும். நண்பர், உறவினர் ஆதரவு. தொழில், வளர்ச்சிப்பணி நடக்கும். உபரி வருமானம். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். உடல் நலம் சீராகும். சுகம். |
| துலாம் | மாறுபடுபவரிடம் விலகுவது நல்லது. அதிக வேலை செய்து மனப் பதற்றம் போக்குவீர்கள். பணவரவில் தாமதம். உடல்நலம் பலம்பெறும். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். |
| விருச்சிகம் | வசீகரமாற்றம் உருவாகும். நண்பரிடம் உதவி கிடைக்கும். வேலைப்பளு. உபரி வரவு. பெற்றோரின் தேவை நிறைவேற்றுவீர்கள். வெளியூர் நற்செய்தி. பிள்ளைகள் முன்னேற்றம். |
| தனுசு | உறவினர் உதவி. சமூகத்தில் உயர்ச்சி. உற்சாகமும், செயல்களில் சுறுசுறுப்பும். தொழில் வளர்ச்சிப் பரிமாணம். பணவரவும், நன்மையும். எதிரி வியந்து விலகுகிற நல்ல வாழ்வு. |
| மகரம் | உற்சாக மனது. திட்டமிட்டவை நிறைவேறும். போட்டி குறையும். சராசரி பணவரவு. நண்பருடன் கருத்துக்கள் பகிர்வு. சலுகைகள் கிடைக்கும். புத்திரரால் மகிழ்ச்சி. பிணி குறையும். |
| கும்பம் | இனிய பேச்சினால், செயல் நடக்கும். நண்பர்களால் மகிழ்ச்சி. தொழிலில் புது மூலதனம். சமூக மதிப்பு வளரும். வழிபாடு. தாய்வழி உறவு உதவும். குடும்பச் சிக்கல் விலகும். |
| மீனம் | தொடர்பில்லாத பணி ஒன்று குறுக்கிடும். குடும்ப உதவி கிடைக்கும். கூடுதல் உழைப்பு. அளவான பணவரவு. வாகன பராமரிப்பு செலவு. மாற்றாரிடமும் மதிப்பு. மன அமைதி உண்டாகும். |

## ஞாபகம் வருதே...



இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டிக்கு முன்னர் மைதானத்தைச் சுற்றி வலம் வந்த இந்திய அணியின் முன்னாள் தலைவர்களான கபில்தேவ், கவாஸ்கர் ஆகியோரைக் காணலாம்.

# கிரிக்கெட்டின் சகாப்தம் ஒரு நாளுக்கு “டாட்டா”



(மும்பை)

ஒரு நாள் போட்டியிலிருந்து ஓய்வுபெறுவதாக இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்று அறிவித்துள்ளார்.

சமீபகாலமாக சச்சின் டெண்டுல்கரின் ஆட்டம் மோசமாக இருந்து வந்தது. அதிக போட்டிகளில் போல்டாகி வெளியேறினார். இதனால் அவர் மீது விமர்சனங்கள் எழுந்தன. போட்டியில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என்று மூத்த வீரர்கள் பலர் கருத்து தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக நேற்று மும்பையில் சச்சின் டெண்டுல்கர் அறிவித்தார். ஓய்வு குறித்து கருத்துத் தெரிவித்த சச்சின், ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறேன், உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் பங்கேற்றதை ஆசீர்வதிக்கப்பட்ட கணமாகக் கருதுகிறேன். 2015ஆம் ஆண்டுக்கான தயாரிப்புகள் விரைவில் தொடங்க வேண்டும். எதிர்கால இந்திய அணி வெற்றி பெற வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். எனக்கு இத்தனை நாட்களாக ஆதரவு தெரிவித்த அனைவருக்கும் நான் எக்காலமும் நன்றியுடையவனாகிறேன் எனத் தெரிவித்தார்.

ஒருநாள் கிரிக்கெட்டின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் 463 ஒருநாள் போட்டிகளில் 18,426 ஓட்டங்களை விளாசியுள்ளார். இதில் ஒரு இரட்டைச் சதம் உட்பட 49 சதங்கள், 96 அரைச்சதங்கள் அடித்துள்ளார். அத்துடன் 2016 பவுண்டரிகளையும், 195 சிக்சர்களையும் அடித்த சச்சின் 140 பிடி-களை எடுத்துள்ளார். 62 முறை ஆட்ட நாயகன் விருதும், 15 முறை தொடர் நாயகன் விருதும் சச்சின் பெற்றுள்ளார். சச்சின் 1989ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதி பாகிஸ்தானுக்கு எதிராக குஜ்ஜரன்வாலாவில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் அறிமுகமானார். சுமார் 75 ஒருநாள் போட்டிகள் கழித்துத்தான் சச்சின் ஒருநாள் போட்டிகளில் தொடக்க வீரராக களமிறங்கத் தொடங்கினார். முதல் சதத்தை இலங்கையில் நடைபெற்ற சிங்கர் கோப்பை போட்டியில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக எடுத்தார். அப்போது தொடங்கிய சத பயணம் இப்போது முடிவடைந்துள்ளது. ஏற்கனவே, ருவென்ரி-20 போட்டிகளிலிருந்து சச்சின் டெண்டுல்கர் ஓய்வுபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சவாலுக்குத் தயார்

(புதுடில்லி)

இந்திய அணியின் சவாலைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் அணியின் ருவென்ரி-20 கப்டன் முகமது ஹபீஸ் தெரிவித்தார்.

இந்திய அணியின் சவாலை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இந்தத் தொடருக்காக கடினமான பயிற்சியில் ஈடுபட்டு தீவிரமாக தயாராகி உள்ளோம்.


தற்போதைய நிலையில் (இங்கிலாந்துடன் டெஸ்ட் தொடரை இழந்ததால்) இந்திய அணியின் உறுதி சற்று நிலைகுலைந்திருக்கலாம். ஆனால் இது புதிய வடிவிலான (ருவென்ரி-20) போட்டி. அவர்களின் ருவென்ரி-20 அணி சரியான கலவையில் சிறப்பாக உள்ளது. அதேபோன்று எமது அணியின் சரியான கலவையாகவே இருக்கின்றது.

இந்தியா-பாகிஸ்தான் தொடரில் கடுமையான நிர்ப்பந்தம், அழுத்தம் இருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. நெருக்கடி மட்டுமின்றி, இரு நாடுகள் இடையே எப்போதும் மிகப்பெரிய எதிர்பார்ப்பு இருக்கும். எனவே நெருக்கடி இல்லாமல் எங்களது முழு திறமையை வெளிப்படுத்த முயற்சிப்போம். எமது மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோம் என்று நம்புகின்றேன். விசேட துடுப்பாட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டு இன்ஸாமம் உல்ஹக் சிறப்பான ஆலோசனைகளை வழங்கியுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ருவென்ரி-20 போட்டிகளில் பங்கேற்கவுள்ள பாகிஸ்தான் அணி இந்தியா சென்றுள்ளது.

இந்தியா சென்ற பாகிஸ்தான் அணி இரண்டு ருவென்ரி-20, மூன்று ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கிறது. முதல் ருவென்ரி-20 வரும் 25ஆம் திகதி பெங்களூரில் ஆரம்பமாகவுள்ளது. இதற்காக, மொகமது ஹபீஸ் தலைமையிலான பாகிஸ்தான் அணி, நேற்று முன்தினம் புதுடில்லி சென்றுள்ளது.

## ஓரம் ஓய்வு



(வெலிங்டன்)

ஒரு நாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவிரும்புவதாக நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் ஜேக்கப் ஓரம் தெரிவித்துள்ளார்.

இது வரை 33 டெஸ்ட் போட்டிகள், 160 ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ள 34 வயது நிறைந்த ஓரம் நேற்று முன்தினம் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.

ஓய்வு குறித்து அவர் தெரிவிக்கையில், எனது வயது, தொழிலில் நிலைப்பாடு மற்றும் எனது 2ஆவது குழந்தை பிறப்பு உள்ளிட்ட பிற காரணங்களை முன்னிட்டு இந்த முடிவை எடுத்துள்ளேன். ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியை நான் மிகவும் நேசிக்கிறேன். இந்த போட்டிகளில் தொடர்ந்து விளையாடி கிரிக்கெட் வாழ்க்கையை தொடருவேன் என அவர் கூறினார்.

## சகீர்கானுக்கு கல்தா



(மும்பை)

பாகிஸ்தான் அணிக்கெதிரான ருவென்ரி-20 மற்றும் ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணி விபரம் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சகீர்கான் நீக்கப்பட்டுள்ளதுடன் இஷாந் ஷர்மா அணியில் இணைக்கப்பட்டுள்ளார். மேலும் சேவாக் ருவென்ரி-20 அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் ஒரு நாள் போட்டிக்கான அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள அணி விபரம்:

ருவென்ரி-20 : டோனி (கப்டன்), கம்பீர், ரஹானே, விராட் ஹோலி, யுவராஜ்சிங், ரோகித் ஷர்மா, சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், அசோக் டிண்டா, இஷாந் ஷர்மா, புவனேஸ்வர் குமார், அவானா, சாவ்லா, ராயுடு.

ஒரு நாள் : டோனி (கப்டன்), சேவாக், கம்பீர், ஹோலி, யுவராஜ்சிங், ரோகித் ஷர்மா, சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், இஷாந் ஷர்மா, ரஹானே, அசோக் டிண்டா, புவனேஸ்வர் குமார், சமி அகமெட், மிஸ்ரா.

## மஹேல மீது கிரிக்கெட் சபை அதிருப்தி

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பில், இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன வெளியிட்ட கருத்து தொடர்பில், இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழு தீர்மானமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை கிரிக்கெட் தொடர்பில் தமக்கு இருந்த நம்பிக்கை இல்லாது போய்விட்டதாக அவுஸ்ரேலியாவில் இருந்து மின்னஞ்சல் ஒன்றின் மூலம் மஹேல ஜெயவர்தன தெரிவித்திருந்தார். ருவென்ரி-20 உலக கிண்ண கிரிக்கெட் போட்டியின் வீரர்கள் தொடர்பில் அவர் வழங்கி இருந்த யோசனை ஒன்று ஊடகங்களுக்கு வெளியாக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்த கருத்தை வெளியிட்டிருந்தார். எனினும் மஹேல ஜெயவர்தன, தம்முடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த உடன்படிக்கையை இந்த கருத்தின் மூலம் அவர் மீறி இருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இந்த நிலையில் மஹேல ஜெயவர்தன தொடர்பிலான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாக, அது எவ்வாறு இருக்கும் என்று தற்போது தெரிவிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளது.

## கிண்ணம் வெல்வதே இலக்கு

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னில் தொடரில் கிண்ணம் வெல்ல வேண்டும் என்பதே எனது தற்போதைய இலக்கு என முதல் நிலை வீரர் சேர்பியாவின் ஜோகோவிச் தெரிவித்துள்ளார்.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரில் கிண்ணம் வெல்ல வேண்டும் என்று அதிகமான பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றேன். இந்த ஆண்டு எனக்கு சிறப்பான ஆண்டாக அமைந்தது. இதே போன்று அடுத்த ஆண்டும் சிறப்பான ஆண்டாக அமையும் என எதிர்பார்க்கின்றேன். கடினமான பயிற்சி, அர்ப்பணிப்பு இருப்பதால் நிச்சயம் இலக்கை அடைய முடியும் என நம்புகின்றேன் எனவும் தெரிவித்தார்

## ரொம்ப பதற்றமாக இருக்கப்பா!


(மாட்ரிட்)

போட்டியில் மீண்டும் விளையாடுவதை நினைத்தால் பதற்றமாக உள்ளது என, ஸ்பெயின் ரென்னிஸ் வீரர் நடால் தெரிவித்தார்.

ரென்னிஸ் அரங்கில் முதல் 4 இடத்தில் உள்ளவர் ஸ்பெயினின் நடால் (வயது- 26). இதுவரை 11 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற இவர், இடது முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக, விம்பிள்டன், யு.எஸ். ஓப்பன், லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவில்லை.

ஏழு மாத இடைவெளிக்குப் பின், காயத்தில் இருந்து மீண்ட இவர், எதிர்வரும் 27ஆம் திகதி தொடங்கவுள்ள, அபுதாபி ஓப்பன் ரென்னிஸில் பங்கேற்கவுள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த நடால், நீண்ட இடைவெளிக்குப் பின் போட்டியில் பங்கேற்பதால், எப்படி செயற்படுவது என்பதை நினைத்து பயமாக உள்ளது. இருப்பினும், வைத்தியர்கள் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. எல்லாம் நன்றாக நடக்கும் என நம்புகிறேன் என்றார்.



## தொடரை வெல்வோம்

அவுஸ்ரேலிய அணியுடனான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவோம் என இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றிவருகிறது. இதில் முதலாவது போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்த நிலையில், இரண்டாவது போட்டிவரும் 26ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ரங்கன ஹேரத், அவுஸ்ரேலியத் துடுப்பாட்ட வீரர்கள் உள்ளூர்ப் போட்டிகளிலும் 80 தொடக்கம் 90 சதவீதமானளவு வேகப்பந்து வீச்சாளர்களையே சந்திப்பதாகவும், ஆகவே தன்னால் விக்கெட்டுக்களைக் கைப்பற்ற முடியும் எனத் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவிற்கான சுற்றுலாவின்போதும் இதேபோன்ற நிலையே காணப்பட்டதாகத் தெரிவித்த ரங்கன ஹேரத், முதலாவது போட்டியில் தோல்வியடைந்த பின்னர் அணி மீது அதிகமான அழுத்தங்கள் காணப்பட்டதாகவும், இரண்டாவது இனிங்ஸில் அனைவரும் சிறப்பாகச் செயற்பட்டதாகவும் தெரிவித்தார்.

வலுவான துடுப்பாட்ட வரிசையை நாம் கொண்டுள்ளதால் அவுஸ்ரேலியாவுடனான தொடரை எமக்குச் சாதகமாக்கிக் கொள்ளக் கூடிய அதிக வாய்ப்பு எங்களுக்கு இருக்கின்றது. பந்து வீச்சில் நெருக்கடியைக் கொடுத்து அவுஸ்ரேலிய அணி வீரர்களின் விக்கெட்டுக்களை விரைவாக வீழ்த்தி தொடரை கைப்பற்ற முயற்சிப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மெல்போர்னில் வரும் 26ஆம் திகதி இடம்பெறவுள்ளது. ஏற்கனவே நடைபெற்ற முதலாவது போட்டியில் அவுஸ்ரேலிய அணி வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## மரதனில் வென்றோர்



(ஊர்காவற்றுறை)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையால் அண்மையில் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள், பிரிவில் ஞானேஸ்வரனும், பெண்கள் பிரிவில் மரியா கொறற்றியும் முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டனர்.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேசத்தைச் சேர்ந்த வீர,வீராங்கனைகளுக்கிடையில் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டியை ஊர்காவற்றுறை பிரதேச சபையால் கடந்த 14ஆம் திகதி நடத்தப்பட்டது.

ஆண், பெண் என இரு பிரிவினருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:


ஆண்கள் பிரிவில் முதலாமிடம் கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சி. ஞானேஸ்வரன், இரண்டாமிடம் எழுவைதீவைச்சேர்ந்த ஜே.எஸ். ஜெவீந்திரன், மூன்றாமிடம் அயித்தாம் புலத்தைச்சேர்ந்த அ. ஜீவானந்தன் ஆகியோரும், பெண்கள் பிரிவில்முதலாமிடம்எழுவைதீவைச்சேர்ந்த மரியா கொறற்றி, இரண்டாமிடம் எழுவைதீவைச் சேர்ந்த றெஜீனா, மூன்றாமிடம் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கி. கிருஷா ஆகியோர் பிடித்துக் கொண்டனர். வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

## விரைவில் இறுதிப் போட்டி

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வந்த கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் நடைபெற்று வந்த இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 20ஆம் திகதி இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 30ஆம் திகதி இடம்பெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (118)

# புதிய பாரதி, விபுலானந்தா அணிகள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி



புதிய பாரதி அணி

(கிளிநொச்சி)

ஜனாதிபதி தங்கக் கிண்ண கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் புதிய பாரதி மற்றும் விபுலானந்தா அணிகள் முதலிடத்தைப் பிடித்து தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

அகில இலங்கை ரீதியாக டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டிகள் கடந்த 16ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட சங்க மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் புதியபாரதி அணியை எதிர்த்து இளந்தென்றல் அணி மோதியது. கிளிநொச்சி மாவட்டத்தில் இரு அணிகளுமே கரப்பந்தாட்டத்தில் பிரபல்யமாக விளங்கியமையால் இப்போட்டி பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

ஐந்து செட்களைக் கொண்ட தொடராக இடம்பெற்ற இப்போட்டியில் முதல் செட்டை புதிய பாரதி அணி 25-9 என்ற கணக்கில் கைப்பற்றியது. நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் இரண்டாவது செட்டை இளந்தென்றல் அணி கைப்பற்றி சமப்படுத்தியது.

ஆட்ட முறையில் புதிய யுக்தியை வெளிப்படுத்திய புதிய பாரதி அணி தொடர்ந்து இடம்பெற்ற இரு செட்களையும் 25-17, 25-21 என்ற கணக்கில் கைப்பற்றி முதலிடத்தைப் பிடித்ததுடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் விபுலானந்தா அணியை எதிர்த்து அதிசயம் அணி மோதியது. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய விபுலானந்தா அணி 25-21, 25-19 என்ற நேர் செட்டில் வென்று முதலிடம் பிடித்ததுடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில், கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். குமார், பச்சிலைப்பள்ளி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். ஜெயக்குமார் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (93)

# கூட்டமைப்பிலிருந்தும் அரசியலிலிருந்தும் சம்பந்தன் உடன் விலக வேண்டும்!

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை பகிரங்க வேண்டுகோள்!

டிசம்பர் 7ஆம் திகதி சம்பந்தன் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை, உலகெங்குமுள்ள பத்துக் கோடி தமிழ் மக்களிடையேயும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பலர் பெரும் அதிர்ச்சியினால் வாயடைத்துப் போயுள்ளனர். இனிமேலும் தமிழரின் உரிமையைப் பற்றிப் பேசும் தகுதியை சம்பந்தன் இழந்து விட்டார். எனவே அவர் கூட்டமைப்பிலிருந்து விலக வேண்டும்.

"புருட்டஸ் நீயுமா?" என்றொரு வரலாற்றுக் கேள்வி வழக்கிலுண்டு. அதைப் போல் "சம்பந்தன் நீங்களுமா?" என்ற கேள்வி உலகின் பொரும்பாலான தமிழர்களிடையே எழுந்துள்ளது. அவர் நாடாளுமன்றத்தில் டிசம்பர் 7ஆம் திகதி ஆற்றிய ஒரு பகுதி உரை அவர்களின் இதயங்களில் ஈட்டியால் குத்தியதாக புலம்பெயர் தமிழ் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு இழைக்கும் அநீதிகளை பட்டியலிட்டு சம்பந்தன் குறிப்பிட்டார். ஆனால் அந்த உரைக்கு சிறிதும் பொருத்தமற்ற விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றிக் குறிப்பிட்டதுதான் உலகத் தமிழர்களின் கவலைக்குரிய காரணமாக அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள். அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பு என இலங்கை அரசு வேண்டுமானால் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அடிக்கடி கூறிக் கொள்ளலாம். ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் - அதிலும் தமிழ்த் தேசிய விடுதலைக்காக புதல்வர்களை அள்ளிக் கொடுத்த திருக்கோணமலைத் தொகுதியைப் பிரதிநித்துவப் படுத்துபவர் - சம்பந்தன் அவ்வாறு தெரிவிக்கலாமா?

விடுதலைப் புலிகள் ஜனநாயகத்தை மதிக்காததுடன் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டனர் என சம்பந்தன் குறிப்பிட்டதின் காரணம் அவருக்கே சிலவேளை புரியாதிருக்கலாம்.

அவர் தமது நாடாளுமன்ற உரையில் முன்னாள் வெளிநாட்டமைச்சர் கதிர்காமரை புலிகள்தான் கொலை செய்தார்கள் என சிங்கள



நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்த கைதட்டலுக்கும் மத்தியில் தெரிவித்தார். முற்றுமுழுதாக அது உண்மைக்கு மாறான தகவல் என இதுவரை அவர் அறியாதிருப்பது வேதனைக்குரியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அவருக்கு முன்பு நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் போது, எழுந்த அரச அழுத்தங்களின் பின்னணியில் சம்பந்தன் தமது உரையை நிகழ்த்தியதாகக் கருதினாலும் உண்மைக்கு மாறான தகவல்களை அவர் தவிர்த்திருக்கலாம்.

இராணுவம் வெளியேறிவிட வேண்டும் என ஏன் சம்பந்தனால் கேட்க முடியாது? தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்ட அமைப்பை மிக எளிமையாக - தமிழ் மக்களுக்கு இதுவரை எவ்வித நன்மையும் செய்யாத சம்பந்தன் - பயங்கரவாத அமைப்பு என நாடாளுமன்றத்தில் சர்வசாதாரணமாகக் குறிப்பிட்டது ஓர் இமாலயத் தவறு என்பதை இப்போது உணர்கின்றாரா?

தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாத வெற்றிடமொன்று முள்ளிவாய்க்காலின் பின் ஏற்பட்டபோது, அதனை முழுமையாக நிரப்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முடியாது என்பதை உலகத் தமிழர்கள் அறிவார்கள். தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்கவோ, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் ஒன்றைப் பெற்றுக்கொடுக்கவோ முடியாது என்பதை தமிழர்கள் அறிவர். ஆனால், தாயக நிலைமைகளை வெளிநாடுகளுக்கு அறிவிக்கும் பணியைத் தவிர வேறு எதனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் செய்ய முடியாது என்பதும் யாதார்த்தமானது.

ஆனால், அமெரிக்காவின் தேசிய நலன் சார்ந்து இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு செல்லும் அட்டவணை செயற்றிட்டத்துக்கு உதவுவதன் மூலம் ஏதாவது நன்மைகள் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குக் கிடைக்குமா என முயற்சித்துப் பார்க்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சம்பந்தனும் அதில் கூடுதல் கவனம் செலுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

அமெரிக்காவின் ஆலோசனைப்படி சில நடவடிக்கைகளை அவர் எடுத்து வருகின்றார். குறிப்பாக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவின் சிறிலங்காவுக்கு எதிரான காய் நகர்த்தல்களுக்கு சம்பந்தனும் உதவி வருகிறார்.

1977ஆம் ஆண்டு முதல் திருகோணமலைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துவரும் சம்பந்தன், கடந்த 35 ஆண்டு காலமாக தமிழருக்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சேவைகள் எதனையும் செய்யவில்லை. அதேநேரத்தில் அவரின் நாடாளுமன்ற உரை கடந்த முப்பதாண்டு கால தமிழரின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்துவதாகவே அமைகின்றது.

எனவே, கடந்த டிசம்பர் மாதம் 7ஆம் திகதியுடன் அவரின் அரசியல் வாழ்வு அஸ்தமனமாகி விட்டது. அவர் தானாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலக வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் தமது போராட்டத்தை நடத்த முன்வர வேண்டும். "நுணலும் தன் வாயால் கெடும்" என்பதைப் போல, தமிழரின் விடுதலையைக் கேள்விக்குறியாக்கும் விதத்தில் உரையாற்றிய சம்பந்தன் இனிமேல் தமிழரின் உரிமைக்காக குரல் கொடுக்கும் தகுதியை இழந்துவிட்டார்.


**(அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையின் அறிக்கையிலிருந்து)**

---

செய்யுள்களையும் காவியங்களையும் மொழிபெயர்க்க முடியும் என்ற விவாதம் மிகவும் பழமையானது. எவ்வளவுதான் உண்மையாகவும், சாதுர்யமாகவும் மொழிபெயர்த்தாலும், செய்யுளின் ஜீவனைக் கொண்டு வர முடியாது என்று எட்னா

# மொழிபெயர்ப்பு

**- திலீபன் -**



செயிண்ட் வின்சன் மிலே என்பவர் குறிப்பிடுகிறார்.

செய்யுள் என்பது மொழிபெயர்க்கக்கூடியதுதான் என்று ஜான்சன், போப், ஹொரேஸ் ஆகியோர் கருதுகின்றனர். செய்யுளை வேறு மொழிக்குக் கொண்டு போவது என்பது அநேகமாக இயலாத ஒன்றாகும் என்கிறார் ட்ரைடன் என்ற அறிஞர். கால்களை சங்கிலியால் பிணைத்துக் கொண்டு கயிறுமீது நடனம் ஆடுவதற்கு ஒப்பாகும் என்றும் அவர் வர்ணிக்கிறார்.

ஷெல்லி இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறார். ஒலியும் உணர்வும்தான் செய்யுளின் ஜீவன். இதனை மொழி மாற்றம் செய்வது வீணான வேலை என்கிறார் அவர்.

செய்யுளை மொழிபெயர்ப்பது என்பது மிகவும் கடினமான பணிதான். இருந்தும் உலகம் பூராவும் பாராட்டப்படும் மொழிபெயர்ப்புகள் நான்கை இங்கே குறிப்பிடவேண்டும்.

ஷேக்ஸ்பியரின் பதினேழு நாடகங்களை ஜெர்மன் மொழியில் Schlegel மொழிபெயர்த்தது.

கதேயின் ஃபாஸ்ட் ஆங்கிலத்தில் Bayard Taylor என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது.

உமர்கயாமின் ருபியாத் எட்வேர்ட் ஃபிட்ஜெரால்டால் மொழிபெயர்க்கப்பட்டது.

கீதை சமஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்தில் சுவாமி பிரபாவானந்தா மற்றும் கிறிஸ்டோபர் ஷர்வுட் ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டது.

மொழிபெயர்ப்பாளர்கள் மூல மொழி, பெயர்ப்பு மொழி ஆகிய இரண்டிலும் ஆழமான ஞானம் உடையவர்களாக இருக்க வேண்டும். விஷய ஞானம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இங்கு ஒரு மொழியின் வார்த்தைக்குப் பதிலாக வேறு மொழி வார்த்தையை இட்டு நிரப்பினால் போதாது. ஒரு மொழியில் கூறப்பட்ட சிந்தனையை மற்ற மொழியில் சொல்லவேண்டும். அவர் மூல மொழி வார்த்தைக்கு அர்த்தம் கொடுக்கிறார். அந்த அர்த்தத்துக்கு மாற்று மொழியில் வார்த்தைகளைக் கொடுக்கிறார்.

மொழிபெயர்ப்பில் தமிழ் மொழியின் நளினம், மென்மை, மேன்மை தெரிந்திருப்பதோடு, நவீன தொழில்நுணுக்கத்துக்கும் ஈடு கொடுக்க வேண்டும். முப்பது நாற்பது ஆண்டுகளுக்குமுன் திருமண வீடுகளில் வாத்தியக்கரர்கள், நாதஸ்வரமாயினும், பாண்ட் வாத்தியமாயினும் ஒரு பாட்டை வாசிக்கமல்இருக்க மாட்டார்கள். அதுவும் பெண்ணோ, மாப்பிள்ளையோ ஊர்வலமாக வரும்போது கண்டிப்பாக வாசிப்பார்கள். அது:

"கல்யாண ஊர்வலம் வரும் உல்லாசமே தரும் "மகிழ்ந்து நான் ஆடிடுவேன்" என்ற பாடலாகும். இது ஹிந்திப் படத்தின் திரைப்பாடலாகும். "அவன்" என்ற படத்தின் பாடல். இந்தியில் "யுயா" என்று வந்த படத்தின் டப்பிங் வடிவமாகும்.

ராஜ்கபூர், நர்கீஸ் நடித்தார்கள். இசை அமைத்தவர்கள் சங்கர்-ஜெய்கிஷன். பாடலை எழுதியவர் ஷைலேந்தர் என்ற உருதுக் கவிஞர்.


"ராஜா கி- ஆயேகி பாராத் ரங்கீலி ஹோகீ ராத். மகனு மே நாசூங்கி" என்பது அந்தப் பாடல்.

அவன் படத்தின் அத்தனை பாடல்களும் பிரபலமானவை. ஜி.கிருஷ்ணவேணி என்ற ஜிக்கி பாடியவை. அந்தக்காலத்தில் இசைத் தட்டு விற்பனையில் முதலிடம் பெற்றவை. தமிழ் பாடலைக் கேட்டு பாடலாசிரியரைப் பார்க்க ஷைலேந்திரா தமிழ்நாடு வந்தார். ஐயா! மூலத்தை நீங்கள் தமிழில் எழுதி அதனை நான் உருது மொழியில் மொழிபெயர்த்தது போல் இருக்கிறது என்றாராம் அவர்.

மனதில் கவித்துவமும், மடியில் தமிழும் இருந்தால் கவிதையை மொழிபெயர்ப்பது ஒரு அற்புதமான அனுபவமாகும்.

அந்தப் பாடலாசிரியர், கண்ணதாசன்.

## ஐ.க்யூ




நுண்ணறிவை உலகம் முழுவதும் ஐ.க்யூ என்று அழைக்கின்றனர். மனிதர்களின் சராசரி ஐ.க்யூ 100. சாதாரணமாக மனிதனுக்கு 85-115 வரை ஐ.க்யூ இருக்கும். உலகத்தில் ஒரு சதவிகித மக்களுக்கு ஐ.க்யூ 150 ஆக உயர்ந்து காணப்படும். இவர்கள் மாமேதைகள். எட்டாம் வகுப்பு படிக்கும்போது பில்கேட்சின் ஐ.க்யூ 150 ஆக இருந்ததாம்.



## மூக்குக் கண்ணாடியை பாதுகாக்க...

★ மூக்குக் கண்ணாடியை ஒருபோதும் கண்ணாடிப் பகுதி கீழ்ப்புறமாக படும்படி தரையில் வைக்கக்கூடாது. கீறல் விழுந்து பார்ப்பதற்கு சிரமத்தைத் தரும்.

★ கண்ணிலிருந்து கண்ணாடியை எடுக்கும்போது இரு கைகளால் அவிழ்த்து அதே போல் மடித்து அதன் கூட்டில் வைக்க வேண்டும்.

★ வாரம் ஒருமுறை சுத்தமான தண்ணீரில் கழுவி தண்ணீரை தானாக வடிய விடவும். சுத்தம் செய்த பிறகு அதில் உள்ள மஞ்சள் துணியால் மட்டும் துடைக்கவும்.

★ பிளாஸ்டிக் கண்ணாடியைவிட கிளாஸ் கண்ணாடிதான் பார்வைக்கு உகந்தது. கூலிங் கிளாஸ் நல்ல தரமானதாக வாங்கித்தான் அணிய வேண்டும். 3 மாதத்திற்கு ஒருமுறை கண்ணாடியில் உள்ள ஸ்க்ரூவை கடையில் கொடுத்து டைட் செய்ய வேண்டும்.



## அப்படியா!

◗ ஆந்தையால் தனது கண்ணை அங்கும் இங்குமாக சுழற்ற முடியாது. ஆனால் கழுத்தை எப்படி வேண்டுமானாலும் திருப்ப முடியும்.

◗ லத்தீன் மொழியில் "வீடியோ" என்றால் "நான் பார்க்கிறேன்" என்று பொருளாம். அந்தப் பெயரே ஆங்கிலத்திலும் நிலைத்துவிட்டது.

◗ வெள்ளிவிழா, பொன்விழா தெரியும் பட்டு விழா தெரியுமா? ஒருவர் தனது பன்னிரெண்டாவது திருமண ஆண்டு நாளை கொண்டாடுவதற்கு "சில்க் அனிவர்ஸரி" (பட்டு ஆண்டுவிழா) என்று பெயர்.

◗ சீனாவில் குழந்தைகளின் வயதை அவர்கள் தாயின் வயிற்றில் உருவான நாளிலிருந்து கணக்கிடுகிறார்கள். கிரேக்க நாட்டில் பெண்களின் வயதை திருமண நாளிலிருந்து கணக்கிடுகிறார்கள்.

◗ இப்பொழுது பெரும்பாலும் எல்லா வார, மாதப் பத்திரிகைகளிலும் கேள்வி- பதில் பகுதி இடம்பெறுகிறது. முதன்முதலில் இப்பகுதியை ஆரம்பித்தவர் நோர்த் கிளப் என்ற அமெரிக்கர்தான். வாசகர்களின் கடிதங்களில் ஏதேனும் கேள்வி கேட்கப்பட்டிருக்குமேயானால், அதற்கு பதில் அளிக்கும் விதமாக (Answers) என்ற பகுதியைத் தொடங்கினார்.

◗ புறநானூறு என்ற சங்க நூலில் உண்மையில் 267 ஆவது பாடலும், 268 ஆவது பாடலும் கிடைக்கவில்லை. அதனால் 398 பாடல்கள்தான் உள்ளன.

◗ இஸ்ரேல் நாட்டின் புத்தாண்டு செப்டம்பர் மாதம் தான் தொடங்குகிறது. 12 மாத பெயர்களில் ஒன்று சிவன் என்றும் மற்றொன்று ஐயன் என்றும் வழங்கப்படுகிறது.

◗ ஒட்டகத்தின் முதுகு வளைந்திருப்பது போலத் தோன்றினாலும் அதன் முதுகெலும்பு நேராகத்தான் இருக்கிறது. தசைதான் கோணலாக இருக்கும்.

## சில புள்ளிவிவரங்கள்



☆ ஒரு மழைத்துளியின் சராசரி எடை - 0.2 கிராம்

☆ ஹவாய் மொழியில் 12 எழுத்துக்களே உள்ளன.

☆ உலகில் சுமார் 77 கோடி குதிரைகள் உள்ளன.

☆ வீட்டில் மொய்க்கும் ஈயின் ஆயுட்காலம் 17 நாட்கள்தான்.

☆ அரிசியில் மட்டும் ஆறாயிரம் ரகங்கள் உள்ளன.

☆ உலகில் 5800 மொழிகள் பேசப்படுகின்றன.

☆ பெண்கள் மூளையின் சராசரி எடை 1.25 கிலோகிராம்.

☆ ஆண்கள் மூளையின் எடை 1.36 கிலோகிராம்.




# ஒஸ்கார் விருதினை வென்ற ஈரானின் முதல் திரைப்படம்

- எம்.ரிஷான் ஷெரீப்

விவாகரத்துக் கோரி நிற்கும் ஒரு இஸ்லாமியத் தம்பதியிடமிருந்து காட்சி ஆரம்பிக்கிறது. விவாகரத்துக்கான காரணம் தமது பதினொரு வயது மகளின் எதிர்காலம். ஈரானின் நெருக்கடியான சூழ்நிலையில் தனது மகள் வாழ்வதை விரும்பாத மனைவி ஸிமின், தனது கணவன் நாதிருடனும் மகள் தேமேயுடனும் வெளிநாடு சென்று வாழத் தீர்மானிக்கிறாள். கணவனால் அவர்களுடன் வர முடியாத சூழ்நிலை. ஞாபகமறதி (அல்ஸீமர்) நோயினால் பாதிக்கப்பட்ட முதியவரான தனது தந்தையைப் பார்த்துக் கொள்ளும் கடமை தனக்கு இருப்பதால் அவளது வெளி நாட்டுப் பயணத்திற்கு உடன்பட மறுக்கிறான். மனைவி விவாகரத்துக் கோரி விண்ணப்பிக்கிறாள்.

"ஒரு வேலைக்காரரை வச்சுப் பார்த்துக்கலாமே. அவருக்கு இவர் தன்னோட மகன் என்பது கூடத் தெரியாது."


"ஆனா அவர் என்னோட தந்தைன்னு எனக்குத் தெரியும்."

இவ்வாறாக நீதிபதியின் முன்னால் வாதிட்டுக் கொள்ளும் தம்பதியினது விவாகரத்து குறித்த விசாரணையின் முடிவில் விவாகரத்துக்கான காரணம் வலிதற்றதெனக் கூறி அவ் விண்ணப்பத்தை நிராகரிக்கிறது நீதிமன்றம். அதற்கு மேலும் கணவன், மகளுடன் சேர்ந்து வாழ விரும்பாத மனைவி தனது பெற்றோரிடம் சென்று விடுகிறாள். அதற்கு முன்பு, கணவன் வங்கி வேலைக்கும், மகள் பாடசாலைக்கும் சென்றதன் பின்னால் வீட்டில் தனித்திருக்கும் தனது வயோதிப மாமனாரைப் பார்த்துக் கொள்வது யாரென்ற கவலையில் மனைவி, ஒரு பெண்ணை அதற்காக ஏற்பாடு செய்கிறாள். அதன் பின்னர் அக் குடும்பத்தில் நடந்தவை என்ன என்பதுதான் படத்தின் கதை.

இஸ்ரேலின் திரைப்படமான "ஃபுட் நோட் (Footnote)"டைத் தோற்கடித்து, இந்த வருடத்துக்கான 84 ஆவது ஒஸ்கார் விருது விழாவில், சிறந்த வெளிநாட்டுத் திரைப்படத்துக்கான ஒஸ்கார் விருதினை வென்றெடுத்திருக்கிறது "எ ஸெபரேஷன் " A Separation" எனும் இந்த ஈரான் திரைப்படம்.

தனது கணவன் கடனாளியான நிலையில், அன்றாட வாழ்க்கையைக் கழிக்கச் சிரமப்படும் ஏழைப் பெண் ராஸியா தனது கணவனுக்குத் தெரியாமல் நாளாந்த வருமானத்துக்காக தனது ஆரம்பப் பாடசாலை செல்லும் மகளுடன் அம் முதியவரைக் கவனித்துக் கொள்ளவென வந்து செல்கிறாள். பகல்வேளையில் அவ் வீட்டுக்கு வந்து முதியவருக்கு பணிவிடை செய்துவிட்டு, அவ் வீட்டவர்கள் வந்ததும், தனக்கான ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்புகிறாள். ஒரு நாள், அவள் வீட்டினைச் சுத்தப் படுத்திக் கொண்டிருக்கையில், முதியவர் வீதிக்குச் சென்று விடுகிறார். வாகன நெருக்கடிக்கிடையே வீதியைக் கடக்கும் முதியவரைக் காப்பாற்ற அவள் ஓடுகிறாள்.

அடுத்த நாள் வங்கிக்குச் சென்ற நாதிரும், பாடசாலை சென்ற அவனது மகள் தேமேயும் வீட்டுக்குத் திரும்பி வந்து பார்த்தால் வீடு பூட்டப்பட்டிருக்கிறது. சாவி வைக்குமிடத்தில் சாவி இல்லை. தன்னிடமிருந்த திறப்பைக் கொண்டு கதவைத் திறக்கும் கணவன், உள்ளே சென்று பார்க்கிறான். மகள் அலறுகிறாள். அவனது முதிய தந்தை கட்டிலருகே விழுந்து பேச்சு மூச்சற்றிருக்கிறார். அவரது கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. திகைத்துப் போகின்றனர் கணவனும் மகளும். முதலுதவிகள் செய்து



தந்தையைக் காப்பாற்றுகிறான் கணவன். கோபமும், கழிவிரக்கமும், அழுகையும் அவனிடம் மிகைத்திருக்கும் நிலையில் ராஸியா, தனது மகளுடன் வீட்டுக்கு வருகிறாள். தனது தந்தையை அநாதரவான நிலையில், கைகளைக் கட்டித் தனியாக விட்டுச் சென்றதற்கு ராஸியாவைத் திட்டி வெளியே தள்ளுகிறான் கணவன். தனது பணத்தைத் திருடியதாகவும் அவள் மீது குற்றம் சுமத்துகிறான். அவள் வாசலிலிருந்து கதறுகிறாள். தனது அன்றைய ஊதியத்தைத் தருமாறு கெஞ்சுகிறாள். திடீரென ராஸியாவும் அவளது மகளும் கதறியழுவதைக் கேட்டுக் கதவைத் திறந்து பார்க்கிறாள் தேமே. படிகளில் விழுந்து எழும்பும் ராஸியாவைக் காண்கிறாள் அவள்.

அதன்பிறகுதான் அக் குடும்பத்தில் பாரிய சிக்கல்கள் எழுகின்றன. ராஸியா ஐந்து மாதக் கர்ப்பிணியாக இருந்திருக்கிறாள் என்பதுவும், அந்தச் சம்பவத்தில் அவளது குழந்தை வயிற்றிலேயே இறந்துவிட்டது என்பதுவும் அக் கணவனைக் கொலைகாரனெனக் குற்றம்சாட்டி அவனைக் கைது செய்ய ஏதுவாக அமைகிறது. அதன் பின்னர் நடந்தவை என்ன? அக் கணவன், மனைவி விவாகரத்து வழக்கிற்கு என்னவானது? மகள் தேமே, முதிய தந்தை ஆகியோரின் நிலைமை என்ன? என்பவற்றை உணர்வுபூர்வமாக இத் திரைப்படம் சித்தரிக்கிறது.

பல விருதுகளை வென்று சிறந்த இயக்குனராக தனது பெயரை நிலைநாட்டியுள்ள இயக்குனர் அஸ்கர் ஃபர்ஹதிக்கு இத் திரைப்படத்தின் மூலமும் சிறந்த இயக்குனருக்கான விருது கிடைத்துள்ளது.

படத்தின் ஒரு காட்சியில் நாதிருக்கும் ஸிமினுக்கும் இடையிலான உணர்வுபூர்வமான உரையாடல் இப்படி இருக்கிறது.

"இந்தப் பிரச்சினைக்கு நான் காரணமல்ல."

"அவர்களுடைய குழந்தை இறந்து விட்டது."

"என் தந்தையும் துன்புறுத்தப்பட்டிருக்கிறார். அவர் இன்னும் கதைக்கவேயில்ல."

"அவர் இதுக்கு முன்னாடியும் கூடக் கதைக்கேல்ல"

"ஆனா அவர் பேசிய சில சொற்கள்ல நான் சந்தோஷப்பட்டிருக்கேன்."

"அவர் பேசாம இருக்கிறது ஒரு குழந்தையை இழக்கிறதை விட அவ்வளவு மோசமானதா?"

"அதுக்கு நான்தான் காரணம்னு நீங்க எப்படிப் பார்க்கிறீங்க?"

"பிறகு எப்படி அவ தன்னோட குழந்தையை இழந்தா?"

"எனக்குத் தெரியாது. அவள் கணவன் அவளுக்கு ஏதோ செய்து அதனால குழந்தையை இழந்திருக்கலாம். இப்ப என் மீது குற்றம் சுமத்துறா. அன்றைக்கு டொக்டர்கிட்ட போனதா அவளுடைய பிள்ளை சொல்லுது. நான் வீட்டுக்கு வரும்வரை டொக்டரிடம் போறதுக்கு அவளால ஏன் காத்திருக்க முடியாமப் போனது? இவ்வளவு வயதானவரை அவள் ஏன் கட்டிலோடு கட்டி வச்சுட்டுப் போனாள்?"

எல்லாக் கதாபாத்திரத்தின் மீதும் அனுதாபத்தை ஏற்படுத்தி விடும்படியான படத்தின் ஒவ்வொரு காட்சியும் உரையாடல்களும் நாற்காலியின் முனைக்கு நம்மை இழுத்து வருகிறது. காந்தமாக ஈர்க்கிறது. எந்தநிலையிலும் எதுவும் நடக்கலாம் எனும் உயிர்ப்பு நிலை படம் முழுவதும் விரவியிருக்கிறது. இக் கதை இடம்பெறும் களம் ஈரானாக இருந்தபோதிலும், இக் கதையானது ஈரானுக்கு மாத்திரமானதேயல்ல. முழு உலகத்தின் எல்லா மூலைகளிலும் எக் கணத்திலும் நடைபெறக் கூடியது.

ஒஸ்கார் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட இரண்டாவது ஈரான் திரைப்படமாக இது இருப்பதோடு, ஒஸ்கார் விருதினை வென்ற முதல் ஈரான் திரைப்படமாகவும் இது அமைகிறது.

# பிலோமியின் காதலர்கள்

**- உதயசங்கர்**


பெரும்பாலான இரவுகள் கொடுங்கனவுகள் என்னைச் சூழ்ந்திருக்க திடுக்கிட்டுக் கண்விழித்திருக்கிறேன். ஏதோ இனம் புரியாத தனிமையும் திடீர் திடீரென அநாதரவான ஒரு மனநிலையும் வந்துவிடும். எப்போது வரும்? எப்படி வரும்? என்றெல்லாம் சொல்ல முடியாது. ஆனால் ஆறுதல் வேண்டியிருந்தது. ஒண்ணுமில்ல..ஒண்ணுமில்ல என்று சொல்லும் ஆறுதல்.

நண்பர்களிடம் பேசிக் கொண்டிருப்பதில், புத்தகங்களை வாசிப்பதில் எனக்கு அந்த ஆறுதல் கிடைத்தது. அதிலும் சில புத்தகங்கள் நம்மை வேறு உலகத்திற்கே கொண்டு சென்றன. நம் அந்தரங்க உணர்ச்சிகளைத் தெரிந்து கொண்டதைப் போல ஆறுதல் அளித்தன. நம் தலைகோதி மடிசாய்த்து வருடிக் கொடுத்தன. அந்தப் புத்தகங்கள் வாசிப்பவனின் மீது அன்பு செலுத்தின. பேரன்பின் ஒரு துளியைச் சுவைக்கும் போது முகத்தில் தோன்றுமே ஒரு பரவசம் அந்தப் பரவசத்தைக் கண்டு தாய்மையின் பூரிப்போடு அமைதியாய் நம்மைப் பார்த்துக் கொண்டிருந்தன. அப்படிப்பட்ட புத்தகங்களை வாசித்து முடித்தபின்பு மனதில் ஒரு அமைதி தோன்றும். புறவுலகின் எந்த நிகழ்வுகளும் பாதிக்க முடியாத ஒரு அமைதி. அந்த அமைதியின் கீழ் நீர்மையாய் மனம் ததும்பிக் கொண்டிருக்கும். பற்றியும் பற்றற்றும் இருக்கும் ஒரு விழிப்பு நிலை. பார்க்கும் மனிதர்களின்மீது, பொருட்களின்மீது அன்பு மீதூறும் இன்பநிலை.

நாங்கள் இவான் துர்கனேவின் மூன்று காதல் கதைகள், செகோவின் நாய்க்காரச்சீமாட்டி, தல்ஸ்தோயின் அன்னாகரினினா, சிங்கிஸ் ஐத்மாத்தவின் ஜமீலா, வாசித்தோம். தி.ஜானகிராமனின் மோகமுள், வாசித்தோம். வண்ணநிலவனின் கடல் புரத்தில் வாசித்தோம். ஏற்கனவே வண்ணநிலவனின் எஸ்தரும், பாம்பும் பிடாரனும், எங்கள் மனதை ஆக்கிரமித்துக் கொண்டன. கடல் புரத்தில் எங்களுடைய அப்போதைய காதல்பொங்கும் மனநிலையில் எங்களுடைய வேதப்புத்தகமாக மாறியிருந்தது. அதைப் படித்த பிறகு அதைப்பற்றியும், வண்ணநிலவனைப் பற்றியும் பேசாத நாட்களே கிடையாது. பிலோமி எங்கள் பிரியத்துக்குரியவளாகி விட்டாள்.



பிலோமி மாதிரி ஒரு பெண் எங்களைக் காதலிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம். கருத்த, சிறிய, உதடுகளையுடைய மிகக் கருப்பான அந்தத் தாழ்த்தப்பட்டவள் எங்கள் மனதை ஆக்கிரமித்துக் கொண்டாள். கடல்புரத்தில் நாவலில் வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும், ஒவ்வொரு கதாபாத்திரத்தையும், அலசி ஆராய்ந்தோம். அந்த நாவலைப படித்த ஒரு மாதத்திற்கு எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் அது கடல்புரத்தில் நாவலிலும், பிலோமியிலும் வந்து முடிந்தது. மனிதர்களிடம் உள்ள அன்பு என்ற வஸ்துவின் மூலம் இந்த வாழ்க்கையை, சக மனிதர்களை, துரோகத்தை, வஞ்சத்தை, பழியுணர்ச்சியை, பேராசையை, பகையை, வெற்றி கொள்ள முனையும் முயற்சியே இந்த நாவல். எல்லோருமே நல்லவர்கள் தான். எவ்வளவு கொடிய மனிதனிடமும் அன்பு எனும் ஊற்று சுரந்து கொண்டு தானிருக்கும். அவன் தன் மீது மட்டுமோ, தன் குடும்பத்தார் மீது மட்டுமோ, தனக்கு வேண்டியவர்கள் மீது மட்டுமோ அன்பு செலுத்துகிறான். அது பிரதிபலன் எதிர்பார்த்து செலுத்துகிற அன்பு. அன்பான ஒவ்வொரு செயலுக்கும் பின்னால் நீயும் இதைப் போல செய்ய வேண்டும் என்று கண்டிஷனோடு வருகிற அன்பு. உலகத்தில் உள்ள எல்லோரும் அன்பின் பிரம்மாண்டத்தை உணர்ந்தவர்களில்லை. வாழ்வில் ஏதோ ஒரு கணத்தில் பரிசுத்தமான அன்பின் தரிசனத்தை உணர்கிறார்கள். அந்த அன்பின் ஒளியை யாராலும் தாங்க முடிவதில்லை. அது எல்லாவற்றையும் கொடுப்பது. எதையும் எதிர்பாராமல் தன் உடல்,பொருள், அனைத்தையும் கொடுப்பது. தன்னை, தன் குடும்பத்தை, தன் உற்றாரை, அல்ல இந்த உலகத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளையும் தன் கருணைபொங்கும் ஒளியின் அரவணைப்பால் அணைத்துக் கொள்வது. அதற்கு ஒரு மகத்தான மனது வேண்டியதிருக்கிறது. அந்த மகத்துவத்தின் ஒரு துளியை பிலோமி தன் வாழ்வில் தரிசித்து விட்டாள் என்று தோன்றியது.



அதனால் தான் தன்னைப் பயன்படுத்திக் கொண்ட காதலன் சாமிதாஸின் மீதோ, தன்னை எப்போதும் கண்டித்துக்கொண்டேயிருக்கும் அம்மா மரியம்மை மீதோ, தன் வல்லம் தவிர வேறு எதைப்பற்றியும் கவலைப்படாத அப்பா குருசு மிக்கேல் மீதோ, பேராசை கொண்ட தன் அண்ணன் செபஸ்தி மீதோ, தன் அம்மாவின் சிநேகிதர் வாத்தி மீதோ, தன்னைக் கொத்திக் கொண்டு போகத்துடிக்கும் ஐசக் மீதோ, வல்லத்துக்குப் பணம் தராமல் ஏமாற்றிய சிலுவை மீதோ, யார் மீதும் அவளுக்குக் கோபம் வருவதில்லை. அவளுக்கு அம்மாவின் சிநேகிதராக இருந்து இப்போது அவளுக்கும் சிநேகிதராக மாறிவிட்ட வாத்தி போதும், அவளுடைய சிநேகிதி ரஞ்சி போதும். அவள் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தாலே எல்லாம் சொஸ்தமாகி விடும். இந்த உலகமே வேறொனறாக மாறி விடும். உன்னதமான அன்பின் கரங்களால் இந்த உலகை அப்படியே ஆவி சேர்த்து அணைக்கத் தோன்றும். பாவம் மனிதர்கள்!

பேரன்பின் ஒளி எங்கும் எப்போதும் இருக்கிறது. அதை உணராத மனிதர்கள் தான் பகை கொள்கிறார்கள், வஞ்சிக்கிறார்கள், கொலை செய்கிறார்கள், பேராசைப் படுகிறார்கள், பழியுணர்ச்சியால் அலைக்கழிக்கப்படுகிறார்கள். கடல்புரத்தில் நாவல் படித்தவுடன் எங்களுக்கு இந்த உலகமே மென்மையானதாக மாறிவிட்டது. தொட்டால் கூட நொந்து விடுமோ என்று பயந்தோம். மழை பெய்து முடித்த மறுநாளில் எல்லாம் புத்தம்புதிதாய் பளிச்சென்று தெரியுமே அப்படித் தெரிந்தது இந்த உலகம். வண்ணநிலவன் நாவலுக்கான என்னுரையில் அன்புவழி மாதிரி ஒரு நாவலை தன் வாழ்நாளில் எழுதிவிட வேண்டும் என்று ஆசைப்படுவதாக எழுதியிருப்பார். நாங்கள் இந்த நாவலைப் படித்து முடித்தவுடன் கடல்புரத்தில் மாதிரி ஒரு நாவலை எழுதிவிட வேண்டும் என்று ஆசைப்பட்டோம். ஆசைப்பட்டுக் கொண்டேயிருக்கிறோம். இத்தகையதொரு மகத்தான நாவலை எழுதிய படைப்பாளியைச் சந்தித்து அளாவளாவ ஆசைப்பட்டோம். அவருடைய கைகளைத் தொட்டுக் கும்பிட விரும்பினோம். ஆனால் அப்போது வண்ணநிலவன் சென்னையில் துக்ளக் பத்திரிகையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் எங்களுடைய அதிர்ஷ்டம் 1983 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், வண்ணநிலவன் கோவில்பட்டி வந்திருந்தார். ஒரு விடுதியில் தங்கியிருந்த அவருடனேயே எப்போதும் யாராவது ஒருத்தரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ இருந்து கொண்டிருப்போம். அவரைத் தனியாக விட்டதாகவோ, ஓய்வெடுக்கவிட்டதாகவோ நினைவில்லை.

மெலிந்த அவருடைய உடம்பு, நீண்ட விரல்கள், பேசுகிற பேச்சில் இருந்த அந்நியோன்யம், எல்லாமும் சேர்ந்து எல்லோரையும் மந்திரத்தால் கட்டிப்போட்டிருந்தது. நான் அப்போது செம்மலரில் வெளியாகியிருந்த என்னுடைய உறவு என்ற சிறுகதையை அவரிடம் வாசிக்கக் கொடுத்தேன். படித்து விட்டு 'அப்படியே நான் எழுதின கதை மாதிரி இருக்கிறது' என்று பாராட்டினார். எனக்குத் தலைகால் புரியவில்லை. நான் அப்போது ஒரு நாலைந்து கதைகள் தான் எழுதியிருப்பேன். அவர் தமிழின் முன்னணி எழுத்தாளர். அவர் வாயால் எனக்குக் கிடைத்த பாராட்டினால் அந்த மாதம் முழுவதும் வாயெல்லாம் பல்லாக மற்ற நண்பர்கள் முன்னால் தலையைத் தூக்கிக் கொண்டு திரிந்தேன்.

வேலை தேடும் காண்டம் சென்னை வரை நீண்ட போது அங்கும் வீடு தேடிச் சென்று வண்ணநிலவனைச் சந்தித்தேன். அது தான் கடைசியாக நான் வண்ணநிலவனைச் சந்தித்தது என்று நினைக்கிறேன். ஆனால் கடல்புரத்தில் நாவல் என்னுடன் எப்போதும் இருந்தது. எப்போது இலக்கியம் பற்றிப் பேசினாலும் கடல்புரத்தில் பற்றிய பேச்சு வராம லிருக்காது. பிலோமியின் நினைவு வராமலிருக்காது. நான் பிலோமியின் காதலனாக இருந்த காலம் கண்ணில் ஆடும். நான் சாமிதாஸை வெறுத்தேன். ஏனெனில் நானே சாமிதாஸாக இருந்தேன். பிலோமியின் அன்பின் மழையில் நனையக் கொடுத்து வைக்காத பாவி சாமிதாஸ் என்று நினைத்தேன். அதோ அலை வீசிக் கொண்டிருக்கும் கடல்கரையில் காற்றில் தன் சேலை முந்தானை படபடக்க நின்று கொண்டு எதிரே விரிந்து கிடக்கும் கடலம்மையை வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்கிறாள் பிலோமி. அவள் கண்களில் ததும்பி வழியும் சாந்தம் கடலின் ஆக்ரோஷத்தைக் குறைக்கிறது. நான் அந்த மணல்வெளியில் பிலோமியை நோக்கி நடந்து போய்க் கொண்டி ருக்கிறேன்.. போகப் போகத் தொலையாத தூரமாக மணல் விரிந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் பிலோ மியின் அருகாமையில் போக முடியவில்லை. பிலோமியின் கறுத்த உடல் ஒளி வீசுகிறது. அது அன்பின் ஒளி. நேசத்தின் ஒளி. என் இளமைக்காலக் காதலியான பிலோமியின் ஒளி' பிலோமி' எங்கள் ப்ரியத்துக்குரிய பிலோமி! எங்கள் வணக்கத்துக்குரிய வண்ணநிலவன்!

> அதோ அலை வீசிக் கொண்டிருக்கும் கடல்கரையில் காற்றில் தன் சேலை முந்தானை படபடக்க நின்று கொண்டு எதிரே விரிந்து கிடக்கும் கடலம்மையை வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்கிறாள் பிலோமி. அவள் கண்களில் ததும்பி வழியும் சாந்தம் கடலின் ஆக்ரோஷத்தைக் குறைக்கிறது. நான் அந்த மணல்வெளியில் பிலோமியை நோக்கி நடந்து போய்க்கொண்டிருக்கிறேன்.. போகப் போகத் தொலையாத தூரமாக மணல் விரிந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் பிலோமியின் அருகாமையில் போக முடியவில்லை. பிலோமியின் கறுத்த உடல் ஒளி வீசுகிறது. அது அன்பின் ஒளி. நேசத்தின் ஒளி.

# குறுந்தூர பயணங்களுக்கு அதிகளவு கட்டணம்

## — மக்கள் விசனம் தெரிவிப்பு —

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு பரந்தன் ஊடாக யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளின் கட்டணங்களில் வேறுபாடுகள் காணப்படுவதா கவும் இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

குறிப்பாக இச்சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் முல்லைத்தீவு பரந்தன் வரை (52 கிலோமீற்றர்) செல்வதற்கு 120 ரூபாவும் பரந்தனிலிருந்து யாழ்ப்பாணம் வரை (62.5 கிலோமீற்றர்) செல்வதற்கு 86 ரூபாவும் அறவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, கொழும்பு ஆகிய பிரதேசங்களிலிருந்து பரந்தனூடாக யாழ்ப்பாணத்திற்கு செல்லும் தனியார் பேருந்துகளுக்கு 86 ரூபா அறவிடப்படும் நிலையில் முல்லைத்தீவிலிருந்து பரந்தன் வரை செல்லும் தனியார் பேருந்துகளுக்கு ஏன் அவ்வளவு பணத்தை தாம் செலுத்த வேண்டும் என கேள்வி எழும்புகின்றனர். எனவே இது தொடாபாக உரியவர்கள் நடவடிக்கை எடுத்து மக்களின் தேவைகளிலும் அக்கறை செலுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# சமுர்த்தி முகாமையாளர்களுக்கு வினைத்திறன் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான I, II வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறவுள்ளதுடன் இரு பரீட்சைகளும் அடுத்தவருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

இதில் இரண்டாவது வினைத்திறன் பரீட்சைக்கு தோற்றுவோர் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த சமுர்த்தி முகாமையாளர்கள் தோற்ற முடியும்.

இரு பரீட்சைகளுக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக முதலாவது பரீட்சைக்கான விண்ணப்பத்தை பணிப்பாளர் நாயகம், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை 4 ஆவது மாவடி செத்சிறிபாய பத்தரமுல்லை என்ற முகவரிக்கும் இரண்டாவது பரீட்சைக்கான விண்ணப்பத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப்பரீட்சைகள் பிரிவு பெலவத்தை பத்திரமுல்லை என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக தகவல்களை 21.12.2012வர்த்தமானியிலோ அல்லது தினமுரசு காரியாலயத்திலோ பார்வையிடமுடியும்.

# இராணுவத்தினரின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம்



(கிளிநொச்சி)

இயக்கச்சி 552 படையணித் தலைமையகத்தின் சிவில் இணைப்பதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் தலைமையகத்தின் நிர்வாகப் பிரதேசத்தின் அனைத்து வயதிற்கும் உட்பட்ட சுமார் 900 பேருக்கான இலவச மருத்துவ முகாமொன்று அண்மையில் இயக்கச்சி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் கொழும்பிலிருந்து வருகை தந்த விஷேட வைத்திய நிபுணர்கள், மருத்துவ இரசாயனக்கூட அலுவலர்களும் ஈ.சீ.ஜி அதிகாரிஞும் கலந்து கொண்டதுடன், சுமார் 30 பணியாளர்களும் கலந்து கொண்டனர். கொழும்பு 06 மெடிக்விக் (தனி) நிறுவனம், கொழும்பு 13 மெடிக்விக் டயக்நொஸ்டிக் நிறுவனம் மற்றும் கொழும்பு 06 ஹொஸ்பிட்டல் அன்ட் ஹோம் கெயார் சர்விஸ் (தனி) நிறுவனம் போன்ற நிறுவனங்களில் இருந்து வந்திருந்த வைத்தியர்களும் பணியாளர்களும் இதில் கலந்து கொண்ட பொது மக்களுக்கு ஈ.சீ.ஜி இரத்தம் மற்றும் வேறு பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

ஹொஸ்பிட்டல் அன்ட் ஹோம் கெயார் சர்விஸ் (தனி) நிறுவனத்தின் தலைவர் டாக்டர் லக்ஸ்மன் கே வீரசேன அவர்களின் தலைமையில் இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது.

கொழும்பு 03 சின்ட் பவர் சொலூசன் நிறு வனம் இந்த மருத்துவ முகாமிற்கான அனுசரணையை வழங்கியது.

தூர இடங்களில் இருந்து வந்த மக்களுக்கான போக்குவரத்து வசதிகளையும் இராணுவத்தினர் வழங்கினர்.

55 படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் அஜித் விஜேசிங்க மற்றும் 552ஆவது படையணித் தலைமையகத்தின் தளபதி கேணல் தீபால் வன்னியாரச்சி ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இம்மருத்துவ முகாமில் மருத்துவபரிசோதனைகள் மட்டுமல்லாது மருந்துகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

552ஆவது படையணித்தலைமையக சிவில் இணைப்பதிகாரி கேணல் ரன்சித் ஜயசுந்தர இணைப்புப் பணிகளை மேற்கொண்டார்.



**யாழ். அரியாலை காந்தி முன்பள்ளியின் கலைநிகழ்வு யாழ்.அரியாலை காந்தி அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்களுடன் விருந்தினர் அழைத்து வரப்படுவதையும் மாணவிகளின் கலைநிகழ்வுகளையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படம்:கே.நந்தகுமார்)**



# வேலை வாய்ப்புச் செய்திகள்

கொழும்பில் உள்ள வீடொன்றில் பணிப்பெண்ணாக கடமையாற்றுவதற்கு 40 முதல் 60 வயதுக்குட்பட்ட நல்ல தேக ஆரோக்கியமும், சுறுசுறுப்பாக செயற்படக்கூடியவர்கள் தேவை. தங்குமிட வசதி மற்றும் உணவுடன் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு: 071 523 2232.

---

டச்சு வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள சுஜித் என்ரபிறைஸ் நிறுவனத்தின் மட்டக்களப்பு கிளைக்கு பணம் வசூலிப்பாளர் தேவை. சிங்களம் தெரிந்திருப்பது விரும்பத்தக்கது. மாதாந்தம் 40,000 தொடக்கம் 45,000 ஆயிரம் ரூபா வரை சம்பாதிக்கலாம். ஆர்வமுடையோர் இன்றும் நாளையும் சாவகச்சேரி அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கவும். தொடர்புகளுக்கு: 021 227 0586.

---

டச்சு வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள சுஜித் என்ரபிறைஸ் நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. மாதாந்தம் ரூபா 30,000 ரூபா தொடக்கம் 35,000 ரூபா வரை சம்பாதிக்கலாம். தொடர்புகளுக்கு: 021 227 0586.

---

ஆங்கிலத்தில் கற்பிக்கக்கூடிய முன்பள்ளி ஆசிரியர்கள் சிறுவர் பராமரிப்பு மற்றும் அலுவலக உதவியாளர்கள் தேவை. ஆர்வமுடையோர் இல.86, 4 ஆவது ஒழுங்கை, பாலவிநாயகர் வீதி, தவசிக்குளம் வவுனியா என்னும் முகவரியில் நடைபெறும் நேர்முகப்பரீட்சையில் எதிர்வரும் 2.01.2013 அன்று முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையில் சமுகமளிக்கவும். தொடர்புகளுக்கு: 077 615 1433.

---

அனுராதபுரத்தில் இயங்கும் க்ளவுஸ் உற்பத்தி கொம்பனிக்கு 16 வயது தொடக்கம் 55 வயதுக்குட்பட்ட ஆண் பெண்களுக்கு வேலைவாய்ப்பு உண்டு. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. மாத வேதனம் 25,000. தொடர்புகளுக்கு: 077 303 2004.

---

வவுனியா - கொழும்பு றான்ஸ் போர்ட் சேவையில் ஈடுபடும் லொறி ஒன்றுக்கு நன்கு அனுபவம் வாய்ந்த சாரதி உடன்தேவை. கொழும்பு நகரில் லொறி செலுத்துவதில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும். தொடர்புகளுகக்கு 077 955 4595.

---

முழுநேரம் வேலை செய்யக்கூடிய ஆண் கணக்காளர் தேவை. வடமராட்சியில் வசிப்பவர் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: ஜமுனா ஸ்ரோர்ஸ், இல.112, பிரதான வீதி நெல்லியடி, தொ.பே.எண். 021 226 2150, 077 742 2604.

---

பிரபல தனியார் ஆங்கில மொழி மூலம் பாலர் பாடசாலைக்கு கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் கடமையாற்றக்கூடிய ஆசிரியைகள் தேவை. ஆர்வமுடையோர் எதிர்வரும் 27.12.2012 அன்று முற்பகல் 9.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும். தொடர்புகளுக்கு 140, கோயில் வீதி, நல்லூர். தொ.பே.எண்: 021 222 5796, 077 700 9653, 077 664 6357.

---

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல ஹாட்வெயர் வர்த்தக நிறுவனமொன்றுக்கு கணக்காளர் தேவை, தொடர்புகளுக்கு: 077 309 2956.

---

தனியார் விமான நிலையமொன்றுக்கு கிளீனர், பாதுகாப்பு உத்தியோகத்தர், சாரதிகள் உடனடியாகத் தேவை. 18 வயது தொடக்கம் 50 வரையானவர்கள் விரும்பத்தக்கது, உணவு, தங்குமிட வசதி உண்டு. சம்பளம் 18,000 ரூபா, 25,000 ரூபா, 30,000ரூபா தொடர்புகளுக்கு 077 456 8264.

---

யாழ்.நகரில் உள்ள பிடவை விற்பனை நிலையமொன்றுக்கு பெண் விற்பனையாளர் மற்றும் 40 தொடக்கம் 55 வயதுடைய ஆண், 20 தொடக்கம் 30 வயதுடைய பெண் சிட்டை எழுதுநர் தேவை. தொடர்புகளுக்கு 077 748 8093, 072 712 2944.

# உறுதிமொழியை காப்பாற்ற தவறிவிட்டது அரசு

## குற்றம் சாட்டுகிறது சிங்கள நாளிதழ்

(கொழும்பு)

தற்போது பிரதம நீதியரசருக்கு எதிராக மேற்கொண்டுள்ள குற்றவியல் பிரேரணை நடைமுறைகள் ஏற்கனவே 2002 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கிய உறுதிமொழிகளுக்கு எதிரானவை என்று லக்பிம செய்திதாள் குறிப்பிட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்பட்டபோது, அதனை நீதித்துறையே ஆராயலாம் என்ற உறுதிமொழியை இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபைக்கு வழங்கியிருந்தது. எனினும் தற்போது அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ள இலங்கையின் நாடாளுமன்றத்துக்கு நீதித்துறையோ அல்லது வெளிநிறுவனங்களோ உத்தரவிடமுடியாது என்று அண்மையில் அறிவித்திருந்தது. இந்தநிலையில் குறித்த செயற்பாடு ஐக்கிய நாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிக்கு எதிரானது என்று லக்பிம குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையிலேயே பிரதம நீதியரசர் நாடாளுமன்ற தெரிவுக்குழு தமக்கு எதிராக வெளியிட்டுள்ள அறிக்கையை ஆட்சேபித்து, தாக்கல் செய்துள்ள மனு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் சபாநாயகர் உட்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளமையையும் லக்பிம சுட்டிக்காட்டியுள்ளது.

# மரணதண்டனையை இரத்து செய்ய ஐ.நா.வில் அதிகரிக்கிறது ஆதரவு

(கொழும்பு)

மரண தண்டனையை இரத்து செய்யும் ஐ.நா. சபை வாக்கெடுப்பில் இலங்கை பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் மரண தண்டனையை இரத்து செய்வது தொடர்பிலான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பின் போது மரண தண்டனை இரத்து செய்யப்படுவதனை ஆதரித்து 111 நாடுகளும், எதிராக 41 நாடுகளும் வாக்களித்ததுடன், 34 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்க வில்லை.

சட்டவிரோத படுகொலைகள், நீதிக்குப் புறம்பான தண்டனைகள் தொடர்பான வரைவுத் திட்டயோசனை வாக்கெடுப்பிலும் இலங்கை பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை, மரண தண்டனை இரத்து தொடர்பிலான ஆதரவு வரவேற்கப்பட வேண்டியது என சர்வ தேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

# பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு புதிய தொழிற்சங்க சம்மேளனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபைக்குட்பட்ட பதவி நிலைத் தரத்தில் கடமையாற்றிவரும் கலாசார உத்தியோகத்தர்கள், சமூகசேவை அலுவலர்கள், கிராம அபிவிருத்தி அலுவலர்கள் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களது எதிர்கால நலன் கருதி தொழிற்சங்க சம்மேளனம் அமைக்கப்படவுள்ளதாகவும் 2013ஆம் ஆண்டு தொடக்கம் அமுலுக்குவரவுள்ள புதிய ஆளனி மற்றும் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வுகாணவும் தொடர்ச்சியாக இவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையிலும் இச்சம்மேளனம் அமைக் கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் 2012.12.27ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் குறித்த அலுவலர்களை அனை வரையும் ஒன்று கூடுமாறு அதன் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(142)

# கருத்துப்பகிர்வு

## கவனத்தை ஈர்க்காத உண்ணாநோன்பு

புகழ்பூத்த முன்னாள் தமிழ் அரசியல் தலைவர் தந்தை செல்வநாயகத்தின் நினைவுத்தூபியின் படிக்கட்டுக்களில் நேற்றைய தினம் சிலர் அமர்ந்திருந்ததை அந்த வீதியால் பயணித்தபோது தற்செயலாக அவதானிக்க நேர்த்தது. உற்றுநோக்கிய போது தமிழரசுக்கட்சிக்காரர்கள் சிலர் அங்கே அமர்ந்திருந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தனர். மேலும் சிலர் தங்களுக்குள் அரட்டையடித்துக்கொண்டிருந்தனர்.

இவர்கள் ஏன் அங்கே இருந்தார்கள் என்று சற்று தொலைவில் விசாரித்த போதுதான் உண்மை தெரிந்தது. அது கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்கக்கோரும் கூட்டமைப்பின் உண்ணாவிரதப் போராட்டம் என்று அறிய முடிந்தது. மீண்டும் அப்பகுதியைத் திரும்பிப்பார்த்தேன் அங்கே பல்கலைக்கழக மாணவர்கள் எவரும் தென்படவில்லை.

சரி அது போகட்டும் கைது செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர் மற்றும் அவர்களின் உறவினர்கள் கூட எவரும் அங்கு இல்லை.

அதுமட்டுமல்ல ஒரு சில தமிழரசுக்கட்சிக்காரர்களைத் தவிர தமிழ்தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிக்காரர்களும் அங்கே சமூகம் கொடுக்காமல் இந்த உண்ணா நோன்பு போராட்டத்தை பகிஸ்கரித்திருந்தனர் என்று பின்னர் அறிய முடிந்தது.

அங்கிருந்து நகர்ந்து சென்று யாழ்.நூலகவாயில் பக்கம் உள்ள மரநிழலில் நின்றேன். எனது நண்பரும் அங்கே வந்து சேர்ந்தார்.

அவரிடம் கதையைக்கொடுத்தேன். அவரின் கணக்குப்படி யாழ்.தேர்தல் மாவட்டத்தில் மொத்தம் 177 கூட்டமைப்பு உறுப்பினர்கள் உள்ளூராட்சி சபைகளில் அங்கத்தவர்களாக உள்ளனர்.

அவர்கள் கூட இந்த போராட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ள வில்லை. நாம் இருவரும் இணைந்து அங்கே உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தியவர்களை விரல் விட்டு எண்ணிப் பார்த்தோம். மொத்தம் 36 தலைகள் மட்டும் தெரிந்தன. அந்த இடத்தில் தொடர்ந்தும் நிற்க பிடிக்காமல் நாம் இருவரும் பயணத்தைத்தொடர்ந்தோம்.

க.சதீஸ்குமார்
உரும்பிராய்.

# இன்னும் ஆறாத காயங்கள் உயிர்கள் குடித்த "சுனாமி" நினைவுகள்



இலங்கையில் ஒரு பெரும் துயரப்பதிவு நிகழ்வு முடிந்து இப்போது எட்டு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டாலும், ஆயிரக்கணக்கான நெஞ்சங்களில் மாறாத காயங்களாக இன்றும் எஞ்சி நிற்கின்றன. நூற்றுக் கணக்கான இதயங்களில் என்றும் மாறாத கடுங்காயங்களாக வலியைக் கொடுத்துக்கொண்டு இருக்கப்போகின்றன. 26 டிசம்பர் 2004 எவராலும் மறக்கமுடியாத சோகநாள். சுனாமிப் பேயலை இரண்டு இலட்சத்து முப்பதினாயிரம் மக்களை இழந்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் காவுகொண்டு துப்பித்தள்ளி விட்ட துயரநாள் அதுவாகும். உலகமே என்றும் சந்திக்காத பாரதூரமான மனிதாபிமான உயிரிழப்புக்கள், சொத்தழிவுகள், குடும்பங்களின் பிரிவுச்சிதறல்கள் அரங்கேறிய பெரும் இயற்கை அழிவுத்தினமாக அது அமைந்தது. இலங்கையில் இந்த இயற்கை சீற்றத்தால் 35 ஆயிரம் மக்கள் செத்தழிந்தனர். ஐந்தரை இலட்சம் பேர் இடம் பெயர்ந்தனர். யுத்தக் கொடுமையால் இடம் பெயர்ந்தோர் மீளவும் அலைக்கழிந்தனர். வல்வெட்டித்துறையிலிருந்து பருத்தித்துறை உட்பட காலிக்கரை வரை அதற்குமப்பாலும் வீடு, வாசல், உயிர், தொழில், சொத்து, இழந்து ஒரு நாளில் ஏதிலிகளாகப் போயினர். இன்றுவரை அவர்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. இன, மத, மொழி பேதமின்றி இத்துயருக்குப் பலியாகினர். அவர்களின் துயரத்தில் இன, மத, மொழி வேறுபாடின்றி இலங்கை முழுமையாக ஒருமைப்பட்ட அற்புதமும் நிகழ்ந்தது. ஏழாண்டுகள் கழிந்து விட்டன.


சுனாமி இலங்கை கரையோரங்களில் ஏற்படுத்திய நாசங்களை என்றும் நினைவில் கொள்ளத்தக்க ஆவணங்களாகப் பலர் பதிந்து வைத்துள்ளனர். கொடுமையின் வகைளை விபரணக் கட்டுரைகளாக எழுதி வைத்தவர்கள் பலர். நாவல்கள், சிறுகதைகள், புனைகதைகள், சாராப்படைப்புகள் எனப் புனைகதை வடிவங்களில் சுனாமி ஏற்படுத்திய சோகக்கதையை பதிந்து விட்டவர்கள் பலர். நூற்றுக்கணக்கான கவிதைகளில் கரையோரப் பிரதேசங்களில் மூர்க்கமாடி ஓய்ந்த சுனாமியின் கொடுரக்கரங்களை காவிய நயத்தோடு கவிமழையாகப் பொழிந்தவர்கள் பலர். புகைப்படங்களாகவும், ஒளிப்பேழைகளாகவும் நிறையவே வெளிவந்துள்ளன. இலக்கியப் படைப்பாளிகளின் இதயங்களில் சுனாமி அரக்கன் ஏற்படுத்திவிட்ட காயங்களை, இலக்கிய வடிவங்களாக படைத்துத் தந்திருக்கிறார்கள். அவ்வகையில் சுனாமி பேரலையின் கொடூரத் தாண்டவங்களை ஒரு தனி மரக்குற்றியில் சிற்பமாக செதுக்கி வைத்திருப்பவர் ஏ.வி.ஆனந்தனாவார்.

சிற்ப சாஸ்திரத்தில் மேற்கொள்ளப்படும் உயர்புடைப்பு, தாள்புடைப்பு, கோதிச்சிதை, முப்பரிமாணம் போன்ற அம்சங்கள் சேர்ந்து சிற்பத்தை முழுமைப்படுத்துகின்றது. ஈழத்தின் புகழ் படைத்த சிற்பியாக ஆனந்தன் உள்ளார். ஜனாதிபதி விருது, ஆளுநர் விருது உட்பட இலங்கை அரசின் காலபூஷணவிருதினைப் பெற்ற கலைஞர். லயன்ஸ் கழகத்தின் சமூகப் பணிகொண்ட மானுடர். சுனாமிப் பேரலைக்கு காவு கொள்ளப்பட்ட கரையோரப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று கரையெங்கும் உமிழ்ந்து கிடந்த சடலங்களையும் இருந்த சுவடே தெரியாமற் சிதைந்து கிடந்த வதியிடங்களையும் அவற்றினைப் பார்த்து பதறி ஓலமிடும் உற்றார் உறவினரையும் கண்டும் கேட்டும் உணர்ந்தும் துயருற்ற கலைஞனின் ஆவேச வெளிப்பாடாக எட்டடி உயரமும் பத்தடி சுற்றளவும் கொண்ட மிகப் பிரமாண்டமான ஒரு தனி மரக்குற்றியில் செதுக்கல் வடிவங்களாகப் பொறித்தார். எவராலும் கற்பனை செய்து பார்க்க முடியாத கலைவடிவமாக அது அமைந்துள்ளது. உலகின் மாபெரும் சோக நிகழ்வை ஒரு ஆவணமாக ஆனந்தன் வடித்துத் தந்துள்ளார். சிற்பக்கலையின் பல்வேறு கலை நுட்பங்களும் அக்கலைப் படைப்பில் காணப்படுகின்றன. பொதுக்கட்புலனின் படிவத்திலிருந்து உய்த்துணர்ந்து பார்த்து புரிந்து கொள்ளும் பாங்கிலான சிற்பச் செதுக்கல்கள் அம்மரக்குற்றியில் காலபூர்வமாகப் பதிந்துள்ளன. ஒரு சாதாரண மரக்குற்றி ஒரு கலைஞனின் கரங்கள் பட்டதும் ஒரு வரலாற்றுப் பதிவாக மாறிவிட்ட அதிசயத்தை வியங்காமல் இருக்க முடியாது. ஓராயிரம் மரச்சிற்பங்கள் விளக்க வேண்டிய சுனாமி அவலத்தை ஆனந்தன் ஒரு சிற்பத்தில் முழுமையாகப் படைத்துள்ளார். அந்த ஒரேயொரு சிற்ப ஒரு சிற்ப ஆலயமாகவும் கலைக் கூடமாகவும் காட்சி தருகிறது. சிற்பி ஆனந்தனின் திறனை வியக்காமல் இருக்கமுடியவில்லை. அவரது கைவண்ணம் மிக அற்புதமாகத் தொழிற்படுகின்றது. சமூகத்துக்கு அவசியமான பணியை எவருமே சிந்தித்தும் பார்க்காத அற்புதப் பணியை ஆனந்தன் ஆற்றியுள்ளார்.

செங்கை ஆழியான்.

**பின்வரும் தகவலைக் கருத்திற் கொண்டு 20 ஆம் வினாவுக்கு விடை தருக.**

அநுராதபுரம், வவுனியா, பதுளை, மாத்தறை, அம்பாறை ஆகிய நகரங்களில் இன்று நள்ளிரவு 12.05 மணிக்கு புறப்பட்ட பேருந்து கொழும்பை அடைந்த நேரம் பின்வரும் மணிக்கூடுகளினால் காட்டப்பட்டுள்ளது.



வவுனியா　அநுராதபுரம்　பதுளை　மாத்தறை　அம்பாறை

27) மேற்கூறிய தகவலின்படி பேருந்துகள் கொழும்பை அடைந்த ஒழுங்குமுறையை சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) அநுராதபுரம் → பதுளை → அம்பாறை → மாத்தறை → வவுனியா
2) வவுனியா → மாத்தறை → அம்பாறை → பதுளை → அநுராதபுரம்
3) பதுளை → அநுராதபுரம் → வவுனியா → மாத்தறை → அம்பாறை
4) மாத்தறை → வவுனியா → அம்பாறை → அநுராதபுரம் → பதுளை


**2013 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இதனைக் கருத்திற்கொண்டு 21 ஆம் வினாவுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.**

28) 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உள்ள வியாழன், வெள்ளிக்கிழமைகளின் எண்ணிக்கை முறையே
1) 5, 5 ஆகும்　2) 5, 4 ஆகும்　3) 4, 5 ஆகும்　4) 4, 4 ஆகும்


29) 2013 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி என்ன கிழமை
1) புதன்　2) திங்கள்　3) வியாழன்　4) வெள்ளி

**தரப்பட்டுள்ள உருவானது சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றின்போது தெரிவுசெய்யப்பட்ட ஓட்டப்பாதையாகும்.**

30) இப்பாதையின் ஓட்ட வீரர்கள் இடது பக்கம் திரும்பிய தடவைகள் எத்தனை?
1) 7　2) 8　3) 9　4) 10




31) சதுரத்தாள் ஒன்று நான்காக மடிக்கப்பட்டு வெட்டப்பட்ட விதத்தினை உரு காட்டுகிறது. வெட்டப்பட்ட உரு விரிக்கப்படும்போது தோன்றும் விதத்தினைத் தெரிவு செய்து கோடிடுக.




**கீழுள்ள எழுத்துக்களையும் அதற்காக இலக்கங்களையும் அவதானித்து பின்வரும் வினாவுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

| A | B | C | D | E | F | G | H | I | J |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

32) மூன்றால் வகுபடும் நான்கிலக்க எண்ணைத் தெரிவு செய்து கோடிடுக.
1) EDAC　2) CDEB　3) GHAB　4) DEGB

33)) சதுர எண் ஒன்றையும் முக்கோண எண் ஒன்றையும் முறையே கொண்ட தொகுதி எது?
1) BF, CF　2) BG, CB　3) EJ, FB　4) CB, EJ



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1.30 மணி



# கல்வி முரசு

வெளியீடு 22

S.T.திலக்


**பின்வரும் பாடலை வாசித்து 1 ஆம், 2 ஆம் வினாக்களுக்கு விடை தருக**

ஒற்றுமையாக விரல்கள் இருப்பதனால்
உந்தன் கைக்கு மிகுந்த பலம்
ஒற்றுமையாக மக்கள் வாழ்வது
ஒவ்வொரு நாட்டிலும் நிறைந்த வளம்
தேடித் தேடிப் படிப்பவரால்
தெளிந்த அறிவை அடைந்திடலாம்
ஓடி ஓடி உழைப்பவரால்
உயர்ந்த இலக்கை எய்திடலாம்.

1) ஒற்றுமைக்கு உவமானமாகக் காட்டப்படுவது,
1) செல்வம்　2) கைவிரல்கள்　3) காகம்

2) உயர்ச்சிக்கு சிறந்த வழி
1) உழைப்பும் - சிக்கனமும்　2) கைவிரலும் - உழைப்பும்　3) ஒற்றுமையும் - உழைப்பும்

**ஒரு குறித்த நகரில் மருத்துவமனை, வாசிகசாலை, பாடசாலை, மைதானம் என்பன அமைந்துள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இதை அவதானித்து 3 ஆம் வினாவுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.**




இங்கு A = மருத்துவமனை　B = பாடசாலை
C = வாசிகசாலை　D = மைதானம்

3) பாடசாலையிலிருந்து ஏனைய மூன்று இடங்களுக்கும் செல்வதற்குக் குறைந்த தூரமாக அமையும் சரியான வழியைத் தெரிவு செய்து கோடிடுக.
1) A→ C→D　3) C → D → A　3) C→A→D　4) A → D →C

**கீழே சில சம்பவங்கள் தரப்பட்டுள்ளன**

4)
A - அசுத்தமான உணவை உண்பதால் கிருமிகள் உடம்பில் தொற்றுகின்றன.
B - ஈக்களின் கால்களில் இருக்கும் அசுத்தங்கள் உணவுடன் சேருகின்றன.
C - சிலர் வீட்டுக்கருகாமையிலே குப்பை கூளங்களைக் குவித்து வைக்கின்றனர்.
D - ஈக்கள் உணவில் அமருகின்றன.
E - உடலினுள் கிருமிகள் செல்வதனால் வயிற்றுவலி ஏற்படுகின்றது.
F - குப்பை கூளங்களினால் ஈக்கள் பெருக்கமடைகின்றன.
மேலே தரப்பட்டுள்ள சம்பவங்களின் சரியான ஒழுங்கு முறையினைக் காட்டும் விடை யாது?
1) CEADFB　2) CFDBAE　3) ABCDEF　4) CFDEAB

**அருகே தரப்பட்டுள்ள படம் சித்தரிக்கும் பிழையான தகவலைத் தெரிவு செய்து கோடிடுக.**

5)


1) தாய் பிள்ளையை ஆறுதல்படுத்துகிறாள்
2) பிள்ளை அழுதுகொண்டிருக்கிறது
3) பிள்ளையின் விளையாட்டுப் பொருள் உடைந்து விட்டது.
4) தாயைப் பிள்ளை ஆறுதல்படுத்துகிறது.

**பின்வரும் வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

6) நீங்கள் வாழும் பிரதேசத்தில் நுளம்புத் தொல்லை கூடுதலாக உள்ளது. அதனைத் தவிர்ப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டியது யாது?
1) தூங்கும்போது நுளம்பு வலையைப் பாவித்தல்
2) தூங்கும்போது நுளம்புச் சுருள் ஒன்றை எரிய வைத்தல்.
3) நுளம்புகள் பெருகும் இடங்களை இல்லாமற் செய்தல்.

7) ஒரு மாணவன் சந்தோசப்படத்தக்க ஒரு சந்தர்ப்பம் எதுவாக இருக்கும்?
1) பரீட்சையில் எதிர்பார்த்த 100 புள்ளிகளைப் பெறல்
2) ஓட்டப் போட்டியில் நான்காம் இடத்தைப் பெறல்.
3) உயரம் பாய்தலின்போது கை ஒன்று உடைதல்.
4) பேச்சுப் போட்டி ஒன்றின்போது நான்காம் இடத்தைப் பெறல்.


8) ஒரு வாங்கில் பெண் பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். ஒரு பக்கத்தில் இருந்து கணக்கிடும்போது ரூபி 13 ஆவதாக அமர்ந்திருந்தாள். மறுபக்கத்தில் இருந்து கணக்கிடும்போது அவள் 6 ஆவதாக அமர்ந்திருந்தாள். வாங்கில் எத்தனை பெண் பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்?
1) 18 2) 19 3) 21 4) 22

**கீழே தரப்படும் தகவலை வாசித்து நன்கு விளங்கி சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

9) ஒளியானது ஒலியிலும் மிக விரைவாகச் செல்லும்
1) மின்னல் தெரிந்த பின்னரே இடிமுழக்கம் ஓசைகேட்டல், ஆனால் இவையிரண்டும் ஒரே நேரத்திலேயே நடைபெறுகின்றன.
2) ஓட்டப்போட்டியின்போது வெடிசுட்ட புகை தெரிந்த பின்னரே சத்தம் கேட்கிறது.
3) மேற்கூறிய யாவும் சரியானவை.


**உருக்களுக்கிடையேயுள்ள தொடர்பை அவதானித்து ஏனைய உருவில் வரவேண்டிய இடைவெளிக்குரிய விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

10)




1) 15 2) 20 3) 30 4) 40

11) உணவு, சிற்றுண்டி, லட்டு என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுவதற்கு பின்வரும் உரு காட்டப்பட்டுள்ளது. இதில் B யினால் காட்டப்படுவது.
1) உணவு 2) சிற்றுண்டி 3) லட்டு




**கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்து கோடிடுக.**

12) கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை என்று ஏமாறக்கூடாது
1) இக்கரைமாட்டிற்கு அக்கரைப் பச்சை 2) மின்னுவதெல்லாம் பொன்னல்ல
3) கழுதை அறியுமா கற்பூர வாசனை

13) கிடைப்பதற்கு அரிதான ஒன்றை மறப்பது நல்லது
1) பேராசை பெருந்தரித்திரம் 2) கிட்டாதாயின் வெட்டென மற
3) சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது



14) ஆடையில் படிந்த தார்க்கறையை நீக்குவதற்கு மிகவும் உகந்த பொருள்
1) மண்ணெண்ணெய் 2) எலுமிச்சம்புளி 3) நல்லெண்ணெய் 4) வினாகிரி

15) பின்வரும் பொருட்களிடையே வெங்களப் பாத்திரங்களை துப்பரவாக்கி மினுக்குவதற்கு மிகப் பொருத்தமானது எது?
1) பழப்புளி 2) தேங்காய்ப்பூ 3) தேயிலைச்சாயம் 4) சுட்டஉமி

16) அழுக்கான ஆடைகளை அணியும்போது, ஏற்படக்கூடிய தீமை எது?
1) துர்நாற்றம் வீசுதல் 2) தொற்றுநோய்கள் ஏற்படல்
3) அசௌகரியமாக இருத்தல் 4) மேற்கூறிய யாவும்

17) ஒருவரின் ஆடையை இன்னொருவர் அணியும் போது, ஏற்படக்கூடிய தோல் நோய்?
1) தடிமல் 2) தேமல் 3) சேற்றுப்புண் 4) எக்சிமா

18) ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நேரடியாக தொற்றக்கூடிய நோய் எது?
1) மலேரியாக்காய்ச்சல் 2) இருதயநோய்
3) அம்மைநோய் 4) நீரிழிவுநோய்

19) நீங்கள் அன்றாடம் பாவிக்கும் பொருட்களில், எவை மண்ணினுள் புதைக்கும்போது, பிரிகை அடைவதில்லை?
1) பிளாஸ்ரிக்கு, கண்ணாடி 2) பொலித்தீன், பிளாஸ்ரிக்கு
3) இரும்பு, பொலித்தீன் 4) ரெஜிபோம், கண்ணாடி

20) கிராமப்புற மக்கள் பற்களைத் துலக்குவதற்கு பயன்படுத்தும் பொருள் எது?
1) சுட்டஉமி 2) மரக்கரி
3) ஆலம்குச்சி 4) மேற்கூறிய யாவும்

21) முகம் பார்க்கும் கண்ணாடியை சுத்தமாக்கப் பயன்படுத்தும் பொருள் எது?
1) தேயிலைச் சக்கை 2) தேங்காய்ப்பூ 3) விம்சோப் 4) பழப்புளி

22) ஆபரணங்கள் செய்யப்பயன்படும் பொருள் எது?
1) பித்தளை 2) இரும்பு 3) தங்கம் 4) வெண்கலம்

23) உப்பை போட்டு வைக்கப் பொருத்தமான பாத்திரம் எது?
1) அலுமினியப் பாத்திரம் 2) கண்ணாடிப் பாத்திரம்
3) எவர்சில்வர் பாத்திரம் 4) பித்தளைப் பாத்திரம்

24) அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் கலக்கப்படாத பொருள்
1) கறுவா 2) வெள்ளைப்பூடு 3) கொறுக்காய் 4) இஞ்சி

25) கையில் ஒட்டியுள்ள பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்ற பயன்படுத்தத்தக்கது
1) சவர்க்காரம் 2) குளிர்நீர் 3) வெந்நீர் 4) மண்ணெய்

26) சோறு சமைப்பதற்காக அரிசியைக் கலைவதற்கு உதவும் பாத்திரம்
1) தாச்சிச்சட்டி 2) பானை 3) அரிக்குஞ்சட்டி 4) பெரிய மட்பானை

# சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை கருணாநிதியை மாட்டிவிட்டார் சசிகலா



சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கெதிராக சாட்சி சொல்ல கருணாநிதி என்னை வற்புறுத்தினார் என்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் சசிகலா கூறினார்.

ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கை நீதிபதி பாலகிருஷ்ணா விசாரித்து வருகிறார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313 இன்படி தற்போது சசிகலாவிடம் கேள்விகள் கேட்கப பட்டு அவரது பதில்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த மே 2 ஆம் திகதி வரை 632 கேள்விகள் கேட்கப் பட்டன. சசிகலாவிடம் கேள்விகள் கேட்டு பதில்களைப் பதிவு செய்வது சனிக்கிழமையுடன் நிறைவடைந்தது.

இதுவரை சசிகலாவிடம் 1,032 கேள்விகள் கேட்கப்பட்டு பதில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற விசாரணையின் போது சசிகலா ஆஜராகி நீதிபதியின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

அப்போது, தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில், அவர் தமிழகத்தில் தலை தூக்கிவிடக் கூடாது என்ற நோக்கத்தில், அவருக்கெதிராக சாட்சி கூறுமாறு கருணாநிதி என்னை வற்புறுத்தினார்.

ஆனால் இதற்கு நான் சம்மதிக்காததையடுத்து, கருணாநிதியின் தூண்டுதலின் பேரில், அரசியல் உள்நோக்கத்துக்காக, சொத்துக் குவிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டு, நான், சுதாகரன், இளவரசி ஆகியோர் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டோம்.

முதல்வர் ஜெயலலிதா மற்றும் எங்கள் 3 பேர் மீது பொய் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தகுந்த சாட்சியங்களுடன் இதை நீதிமன்றத்தில் நிரூபிப்பேன் என்றார் சசிகலா.

இதைத் தொடர்ந்து, இந்த வழக்கு தொடர்பான அடுத்த விசாரணையை டிசம்பர் 26 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

# வடகிழக்கு மாநிலங்களில் கடும் பூமி அதிர்ச்சி



அசாம், மேற்கு வங்கம் மற்றும் வட கிழக்கு மாநிலங்களில் நேற்று முன்தினம் இரவு திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் சரியாக 10 மணி 12 நிமிடத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5 புள்ளி 7 ஆக பதிவாகியிருந்தது. மியான்மரை மையமாக கொண்டு 115 அடி ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிபரங்கள் உடனடியாக தெரியவில்லை


# எதிரிநாட்டு விமானத்தை தாக்கவல்ல அஸ்திரா ஏவுகணை சோதனை வெற்றி

எதிரி நாட்டு விமானத்தை தாக்கவல்ல அஸ்திரா ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தபபட்டதாக இந்திய பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தால் முற்றிலும் இந்திய தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட இநத ஏவுகணை, ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்தின் 2 ஆவது தளத்திலிருந்து நேற்றுமுன்தினம் மாலை 3.34 இற்கு செலுத்தப் பட்டதாக அந்த மையத்தின் இயக்குநர் எம்.வி.கே.வி. பிரசாத் தெரி வித்தார்.

3.8 மீற்றர் நீளம் கொண்ட இந்த ஏவுகணையை செலுத்துவதற்கு முன்னதாக, இதே மையத்திலிருந்து ஆள் இல்லாத "லக்ஷயா" என்ற விமானம் விண்ணில் செலுத்தபபட்டது.

அதைக் குறிவைத்து ஏவப் பட்ட அஸ்திரா, அந்த விமானததை வெற்றிகரமாக தாக்கியது. இதற்கு முன்பு, இதே தளத்திலிருந்து கடந்த வெள்ளிக் கிழமை அஸ்திரா ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்



தப்பட்டது. தொடர்ந்து 2 ஆவது நாளாக நடத்தப்பட்ட அஸ்திரா சோத னையும் வெற்றிபெற்றது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.


ஒற்றை நிலையைக் கொண்டு திட எரிபொருளில் செயற்படும் இந்த ஏவுகணை, இவ்வகை ஏவுகணைகளில் மிகவும் நவீன தொழிலநுட்பம் கொண்டதாகும்.

இந்த ஏவுகணை இந்திய விமானப்படையின் Tejas,Su-30 MKI, Mirage 2000 உள்ளிட்ட போர் விமானங்களில் பொருத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.




# பாதிக்கப்பட்ட மருத்துவ மாணவிக்கு விரைவில் நீதி கிடைக்கும்

## சோனியா உறுதி




(புதுடில்லி)

டில்லியில் ஓடும் பேருந்தில் மருத்துவக் கல்லூரி மாணவி, பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில், பாதிக்கப் பட்ட பெண்ணுக்கு உரிய நீதி கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

டில்லி மற்றும் தமிழகத்தில் நிகழ்ந்த பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையை கண்டித்து, டில்லியில் நேற்று முன்தினம் விடிய விடிய போராட்டம் நடைபெற்றது.

போராட்டக்காரர்களில் ஒரு பிரிவினர் சோனியாகாந்தியின் வீட்டை முற்றுகையிட முயன்றனர்.

இதனையடுத்து, நள்ளிரவில் அவர்களை சந்தித்துப் பேசிய சோனியாகாந்தி, இந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

அந்த பெண்ணுக்கு எவ்வளவு நாட்களுக்குள் நீதி கிடைக்கும் என்ற கேள்விக்கு பதில் அளிக்க சோனியாக காந்தி மறுத்துவிட்டார்.

மிக விரைவில் நீதி கிடைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் சோனியா காந்தி உறுதியளித்தார்.

# ஜனவரி முதல் வாரத்தில் மின் உற்பத்தி ஆரம்பம்

நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் ரூ .13,500 கோடி செலவில் தலா 1000 மெகாவாட் உற்பத்தி திறன் உள்ள இரண்டு அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளன. முதல் அணு உலையில் மின்உற்பத்திக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முடிக்கபபட்டுவிட்டன. இதை ஆய்வு செய்வ தற்காக இந்திய அணுசக்தி துறை' செயலாளர் ஆர்.கே. சின்ஹா நேற்றுக் காலை கூடங்குளம் வந்தார்.

பின்னர் அணுசக்தி கழக உயர் அதிகாரிகள் மற்றும் ரஷ்ய அணுசக்தி கழக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். கூடங்குளத்தில் இந்த வார இறுதியிலேயே மின் உற்பத்தியை தொடங்க திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அணுசக்தி ஒழுங்கு முறை வாரியத்தின் அனுமதி தேவைப்படுவதால் ஜனவரி தொடக்கத்தில் மின் உற்பத்தி தொடங்கும் என தெரிகிறது.

கூடங்குளத்தில் 2 ஆயிரம் மெகவாட் மின்சாரம் உற்பத்தியாகும் போது தமிழகத்திற்கு 955 மெகாவாட் மின்சாரம் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


ஜனவரி மாதம் கூடங்குளத்தில் மின் உற்பத்தி தொடங்கினாலும் படிப்படியாகதான் 1000 மெகா வாட்டை எட்ட முடியும் உற்பத்தியாகும் 1000 மெகாவாட் மின்சாரமும் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுமா என்பது குறித்து மத்திய அரசு தான் முடிவு செய்ய வேண்டும்.

# ராஜீவ்காந்தியை தனது கணவரென சொந்தம் கொண்டாடும் ஆந்திரப்பெண்

(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி யார் என்று கேட்டால் சின்ன குழந்தையும் சொல்லும் சோனியா என்று. ஆனால் இப்போது ஆந்திராவைச் சேர்ந்த ஒரு பெண் ராஜீவ்காந்தி என் கணவர் என்று சொந்தம் கொண்டாடுகிறார்.

ஐதராபாத் நிஜாம் சாகித் ரோடு, தாதாசாகிப் தெருவை சேர்ந்தவர் சபீனா பெரோஸ்கான் (50). நேற்றுமுன்தினம் காலையில் கையில் ஒரு விண்ணப்ப மனுவுடன் ஸ்ரீபெரும் புதூர் சார்பதிவாளர் அலுவகத்துக்கு வந்தார். அந்த மனுவில் ராஜீவ் காந்தி என் கணவர். அவரது இறப்பு சான்றிதழ் நகல் வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.



டில்லியில், இளம் பெண், கொடூரமாக கற்பழிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக, ஜனாதிபதி மாளிகையை கல்லூரி மாணவ, மாணவியர் முற்றுகையிட்டதைத் தொடர்ந்து, பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி, கூட்டத்தை கலைக்க முற்பட்டனர். இதையடுத்து, மாணவர்கள் கலவரத்தில் இறங்கி, பொலிஸ் பேருந்தை சேதப்படுத்தினர்.

# நேபாள சிறுமி துன்புறுத்தல் ஹிந்தி நடிகைக்கு சிறை



தன் வீட்டு வேலைக்காரி மகளை கடத்திச் சித்திரவதை செய்ததாக ஹிந்தி நடிகைக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஹிந்தி நடிகையான ஹுமா கான் (வயது 42), சல்மான்கான் நடித்த "மைனா பியார் கியா" திரைப்படம் உட்பட பல்வேறு ஹிந்தி படங்களில் சிறுசிறு வேடங்களில் நடித்துள்ளார்.

மும்பை அருகே தானேயில் உள்ள இவரது வீட்டில் நேபாள நாட்டைச் சேர்ந்த ரஷ்மா என்ற பெண் வேலை பார்த்து வந்தாள்.

கடந்த 2007 ஆம் ஆண்டு நடிகை ஹுமாகான் புனேயில் உள்ள வீட்டுக்கு குடி பெயர்ந்த போது வேலைக்காரியின் 12 வயது மகளை கடத்திச் சென்று அந்த வீட்டில் அடைத்து வைத்து சித்ரவதை செய்தார்.

அந்த வீட்டில் வசித்த சமுதீன் சேக் என்பவர் இச்சிறுமியை பல முறை கற்பழித்ததாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸில் புகார் செய்ததின் பேரில் நடிகை ஹுமாகான், சமுதீன் சேக் ஆகியோரைக் கைது செய்தனர். பின்னர் இருவரும் பிணையில் வெளியே வந்தனர்.

இது தொடர்பாக வழக்கு தானே நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இவ்வழக்கை விசாரிதத நீதிபதி நடிகை ஹுமாகானுக்கு 3 ஆண்டு சிறை தண்டனையும் ரூ.12 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார்.

ஆனால் கற்பழிப்பு குற்றம் நிரூபிக்கபடாததால் சமுதீன் சேக் விடுதலை செய்யப்பட்டார்.

## குரானை இழிவுபடுத்திய நபர் பாகிஸ்தானில் எரித்துக் கொலை

பாகிஸ்தானில் முஸ்லிம்களின் புனித நூலான குரானை இழிவுபடுத்தியாக நபர் ஒருவர் எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் தெற்கு பகுதியில் உள்ள கிராமத்து பள்ளிவாசலொன்றில் நபர் ஒருவர் தங்கியிருந்தார்.

மறுநாள் காலையில் அந்த பள்ளிவாசலுக்கு அருகே, குரானின் பிரதி ஒன்று கருகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

தங்கியிருந்த நபர் தான் குரானை எரித்தார் என கருதிய கிராம மக்கள், பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்தனர்.

ஆனால் ஒருமணி நேரமே ஆன நிலையில், 200 பேர் அடங்கிய பெரிய கும்பலொன்று காவல்நிலையத்திற்குள் புகுந்து தடாலடியாக அந்நபரை வெளியில் இழுத்து வந்து தீ வைத்து கொளுத்தியது.

இத்தாக்குதல் தொடர்பில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் கவனக்குறைவாக இருந்த காரணத்தினால் பொலிஸ் அதிகாரிகள் ஏழு பேர் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



தென் கொரிய அதிபர் தேர்தலில் ஆளும் கட்சியின் பார்க் கியுன் ஹை வெற்றி பெற்றார். தேர்தல் அதிகாரிகளிடம் இருந்து வெற்றிச் சான்றிதழை பெற்றுக் கொள்ளும் கியுன்.

## வீணான ஆடம்பர நிகழ்வுகளுக்கு தடை

## சீன இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவு



உலகிலேயே கிட்டத்தட்ட முப்பது லட்சம் உறுப்பினர்களுடன் ஆட்பலத்தில் மிகப் பெரிய இராணுவம் சீனாவுக்குரியது.

அதன் இராணுவத்தில் முன்னெடுக்கப்படுகின்ற மாற்றங்கள் பொதுவாக முக்கிய சீர்திருத்தங்களாகவே பார்க்கப்படுகின்றன.

இந்த இராணுவத்திலுள்ள உயர் அதிகாரிகள் இனிமேல் அரச செலவில் விருந்துபசார களியாட்டங்களை நடத்தக் கூடாது என்று புதிய தடை வந்திருக்கிறது.

வீணான ஆடம்பரச் செலவுகளையும் ஊழல் மோசடிகளையும் தடுக்கும் நோக்குடன் அரசாங்கம் இந்த அறிவிப்புக்களைக் கொண்டுவந்திருக்கிறது.

இனிமேல் இராணுவ உயர் அதிகாரிகளின் வரவேற்பு நிகழ்ச்சிகளில் ஆடம்பர விருந்துபசாரங்கள், குறிப்பாக மது விருந்துகள், முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளன.

இப்படியான கட்டுப்பாடுகள் தலைநகர் பீஜிங்கில் உள்ள உயர் சிவில் அதிகாரிகளுக்கும் இப்போது வந்துள்ளன.

பொதுவாக அதிகாரிகள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான 8 விதிமுறைகளை ஆளும் கம்யூனிஸக்கட்சியின் மத்திய குழு அறிவித்துள்ளது.

இராணுவ அதிகாரிகளுக்கான வரவேற்பு பதாகைகள், செங்கம்பளங்கள், மலர் அலங்காரங்கள் போன்ற படோபங்கள் எதுவும் இனி கிடையாது.

அவர்கள் எங்காவது கண்காணிப்பு வேலைகளுக்காகச் சென்றால் ஆடம்பர ஹோட்டல்களில் தங்கமுடியாது. அவர்களது வாகனங்களும் வீதிகளில் அளவுக்கதிகமாக சைரன் ஒலி எழுப்பிக்கொண்டு ஓட முடியாது.

இதேவேளை, நாட்டின் சிவில் துறையில் முதன்முறையாக, பீஜிங்கின் உள்ளூர் நிர்வாகமும் தமது அதிகாரிகளுக்கும் இப்படியான சட்ட விதிகளைக் கொண்டுவந்திருக்கிறது.

அவர்களும் ஆடம்பரங்களைக் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஊழல்களையும் மோசடிகளையும் ஒழிக்காவிட்டால் நாட்டில் குழப்பங்கள் ஏற்படும் என்று சீனாவின் புதிய அதிபர் ஷி ஜிங்பிங் ஏற்கனவே எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுட்டு வீழ்த்தப்பட்டது ஐ.நா. ஹெலிகொப்டர்

ஐ.நா ஹெலிகொப்டரை தெற்கு சூடான் இராணுவத்தினர் சுட்டு வீழ்த்தியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

சூடானிலிருந்து தனியாக பிரிந்த தெற்கு சூடானின் ஜோங்லெய் மாநிலத்தில், ஐ.நா ஹெலிகொப்டரை அந்நாட்டு இராணுவத்தினர் சுட்டு வீழ்த்தினர். அதில் இருந்த 4 ரஷ்ய உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு பான் கி மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பாக தெற்கு சூடான் அரசு உடனடி விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் தவறு செய்தவர்களை தண்டிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதை முதலில் மறுத்த இராணுவம், ரஷ்ய ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தியதாக கூறியது.

அதன் பின் போராளிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றி வந்த சூடான் ஹெலிகொப்டர் என நினைத்து சுட்டதாக தெரிவித்தது.

இருப்பினும் நடந்த தவறுக்கு வருத்தம் தெரிவிப்பதாக இராணுவ செய்தித் தொடர்பாளர் பிலிப் ஆகர் தெரிவித்தார்.



ஜோங்லெய் மாநிலத்தில் இயங்கும் டேவிட் யாவு தலைமையிலான போராளிக் குழுவிற்கு, சூடான் அரசு விமானங்கள் மூலம் ஆயுதங்கள் வழங்குவதாக தெற்கு சூடான் அடிக்கடி குற்றம் சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## உலக அழிவுக்கு விடைகொடுத்து மாயன் இனத்தவர்கள் கொண்டாட்டம்



உலக அழிவு நாள் என்று உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய மாயன் காலண்டர் தினத்துக்கு மாயா இனத்து மக்கள் பாரம்பரிய கொண்டாட்டங்களுடன் விடைகொடுத்தனர்.

மெக்சிகோவின் யுகடான் பகுதியில் வாழும் மாயா இனத்தவர்கள் நேற்று முன்தினம் காலை முதல் பல்வேறு கலாசார நிகழ்வுகளுக்காக தம்மை தயார்படுத்தி வந்தனர்.

மாயன் கலண்டரின் இறுதி நாளுக்கு விடைகொடுக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் புதிய யுகம் ஆரம்பமாகுவதாகக் குறிப்பிட்டு பாரம்பரிய வாழ்த்துப் பாடல்களையும் பாடி மகிழ்ந்தனர்.

அவர்களுடைய கணிப்பின்படி இன்றுடன் 400 வருடகால யுகம் நிறைவுக்கு. வருகிறது.

## கனடாவில் பனிப்புயல் மின்சாரமின்றி மக்கள் தவிப்பு



கனடாவை தாக்கிய பனிப் புயலால், தரையில் 20 செ.மீ உயரத்திற்கு பனி படர்ந்திருந்தது.

ஒண்டோரியாவின் கிழக்கிலும், கியூபெக்கின் மேற்கிலும் 26,000 பேர் மின்சாரமின்றி தவிக்கின்றனர்.

இதனால் ஹைட்ரோ கியூபெக், ஹைட்ரோ ஒன் மற்றும் ஹைட்ரோ ஒட்டாவா மின்சார நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள் மின்வெட்டினால் பல சிரமங்களுக்குள்ளாயினர்.

ஹைட்ரோ ஒன் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களில் எட்டாயிரம் பேருக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. இவர்கள் ஒட்டாவாவின் கிழக்கிலும், மேற்கிலும் குறிப்பாக எம்ப்ரன் அருகே வசிப்பவர்கள் ஆவர்.

ஹைட்ரோ ஒட்டாவா நிறுவனத்திலிருந்து மின்சாரம் பெற்றவர்களும் பனிப்பொழிவு அதிகமானதால் மின்சாரம் கிடைக்காமல் அவதிப்பட்டனர்.

மேலும் சாலைகளில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. குறிப்பாக ஒட்டாவா விமானநிலையத்திற்கு வந்த 20 விமானங்களும், அங்கிருந்து புறப்பட்ட 20 விமானங்களும் தாமதமாக இயக்கப்பட்டது.

## ஒபாமாவின் சிறப்பு ஆலோசகராக இந்திய வம்சாவளிப் பெண்

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் சிறப்பு ஆலோ.சகராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸ்மிதா சிங் நியமிக்கப்பட்டுள்ளார். அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒபாமா, நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் சர்வதேச மேம்பாட்டு கவுன்சில் ஒன்றை உருவாக்கியுள்ளார்.

இந்த கவுன்சில் - நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள், அவற்றை செயல்படுத்த சாதகமான காலகட்டம், பொது மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களின் செயல்பாடு, அவற்றின் இலக்கு, சர்வதேச அளவில் நிலவி வரும் பிரசினைகள், அவற்றுக்கான தீர்வுகள் உள்ளிட்ட பல முக்கியமான விஷயங்கள் குறித்து அதிபர் ஒபாமாவுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தும். இந்தக் கவுன்சிலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸ்மிதா சிங், அதிபர் ஒபாமாவின் சிறப்பு ஆலோசகர்ாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவில் ஸ்மிதாசிங் உள்பட எட்டு பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு நேற்றுக்காலை நிறைவடைந்தது

யாழ். மாவட்ட வைத்தியர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த 48 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பு நேற்று காலையுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை வைத்தியர் சங்கத்தின் யாழ். கிளை தலைவர் வைத்தியர் நிமலன் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் காது, மூக்கு மற்றும் தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர் திருமாறன் கடந்த வியாழக்கிழமை இரவு கந்தர்மடச் சந்தியில் வைத்து இனந்தெரியாத நபர்களின் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இதனைக் கண்டிக்கும் முகமாகவும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியே வைத்தியர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் 48 மணி நேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இவர்களது புறக்கணிப்பினால் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த மற்றைய அனைத்துப் பிரிவுகளும் நேற்று இயங்கவில்லை. எனினும் நேற்றுக் காலை 8 மணியுடன் பணிப்புறக் கணிப்பு நிறைவுக்கு கொண்டுவரப்பட்டதுடன் வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் வழமைக்கு திரும்பிவிட்டதாகவும் யாழ். மாவட்ட வைத்தியர சங்கத் தலைவர் தெரிவித்தார்.

வைத்தியருக்கு நடைபெற்ற சம்பவத்தை கண்டித்து 48 மணி நேர பணிப்பகிஷ்கரிப்பினை மேற்கொண்டோம். எனினும் எமது புறக்கணிப்பு நேற்றுக் காலையுடன் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டாலும் இன்றைய தினம் வைத்தியர் சங்கத்தினுடைய பொதுக்கூட்டம் முற்பகல 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

அதன்போதே மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு முடிவுகள்எடுக்கப்படும். இன்று நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திற்கு எமது தாய்ச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

எமது வைத்தியர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது இந்தச் செயற்பாடுகள் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும். எனினும் இதுவரை சம்பவத்துடன் தொடர்புபட்ட எவரும் பொலிஸாரினால் கைது செய்யப்படவில்லை எனத் தெரியவருகின்றது. அத்துடன் வைத்தியர் திருமாறன் சிகிச்சை பெற்றுவருமவிடுதிக்கு 24 மணி நேர பொலிஸ பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் பெண்ணின் சங்கிலி அறுத்தெடுப்பு

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த இளம்பெண்ணின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் அறுத்துக் கொண்டு தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் குறித்த வீதியால் கரவெட்டி கால்நடை வளர்ப்போர கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் பால்சாலைக்கு கடமைக்காக துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த குறித்த பெண்மணியை மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் தள்ளி விழுத்திவிட்டு கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர்.

எனினும் குறித்த பெண் தனது சங்கிலியைக் கையால் பிடித்ததால் சங்கிலியின் பாதியளவு திருடர்களால் அறுக்கப்பட்டதுடன் கைப்பையும் களவாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கரணவாய் விழுந்தாலடி ஒழுங்கையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் வினோதினி (வயது-26) என்ற இளம்பெண்ணே தனது சங்கிலியைப் பறித்தெடுத்தவராவார்.

சங்கிலி 2 பவுண் நிறையுடையதாகவும் இக்களவுச் சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் குறித்த பெண் முறைப்பாடு செய்துள்ளதாகவுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(116)

### சுய இலாப...

பொருட்டு சில சக்திகளும், பத்திரிகைகளும் செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் குடாநாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகை பதட்டத்தை வெளிக்கொணரும் வகையில் செய்திகளை வெளியிட்டு மக்களை குழப்பி வருகின்றது.

கடந்த காலங்களில் ஒரு பதட்டமான சூழல் இருந்து வந்த போதிலும் இன்று அந்நிலை இல்லையென்றே நான் நம்புகின்றேன் அவ்வாறானதொரு சூழல் இருக்கும் பட்சத்தில் அது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இருந்தபோதிலும் இன்றைய அமைதிச் சூழலை குழப்பும் வகையிலும், சுயலாப அரசியலுக்காகவும் சிலசக்திகள் செயற்பட்டு வருகின்றன. அதன் இன்னொரு வெளிப்பாடே யாழ். பல்கலைக் கழகத்திலும் நடைபெற்றுள்ளது.

அத்துடன், வரம்பையும் அளவையும் மதுப்பாவனை மீறி இன்று பாவனையில் இருப்பதால் இளைஞர்கள் தமது வளமான வாழ்வை நோக்கி உணர்ந்து செயற்படவேண்டும். மதுசாரத்திற்கு எதிரான தமிழ் இளைஞர் அணியின் செயற்திட்டத்திற்கு தமது முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்கும் என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

நிகழ்வில் நல்லை ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் மற்றும் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோரும் உரைநிகழ்த்தினர். ஹெல்தி லங்கா தேசிய சபை உப தலைவர் பிறேமராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஹெல்தி லங்கா நிறுவன தலைமையதிகாரி சக்யநாணயக்கார, யாழ். மாவட்ட மதுவரி அத்தியட்சகர் சோதிநாதன், உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

### இராணுவத்தினரின்...

இந்த ஆவணத்தில், இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள், விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையோர், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், ஒருபாலுறவுச் சேர்க்கையாளர்கள் போன்றோர், அனைத்துலக அகதிகள் பாதுகாப்புத் தேவைப்படக் கூடியவர்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் மூன்று பத்தாண்டுகளாகத் தொடர்ந்த ஆயுத மோதலின் போது, இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அனைத்துலக மனித உரிமைச் சட்ட மீறல்களும், போருக்குப் பிந்திய மோசமான மனித உரிமை மீறல்களும் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் இருந்து புகலிடம் கோருபவர்களின் அனைத்துலகப் பாதுகாப்பு தேவைகளை மதிப்பிடுவதற்கான அகதிகளுக்கான ஐ.நா உயர் ஆணையத்தின் தகுதி வழிகாட்டி -2012 என்ற அறிக்கையிலேயே இந்தப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது. புகலிடம் கோருவோரின் விண்ணப்பங்கள் குறித்து முடிவெடுப்போர் மற்றும் அரசுகளுக்கு உதவும் நோக்கிலேயே இந்த வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளது.

### காய்ச்சலால்...

யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் மரண விசாரணைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ)

### குருநகரில்...

போதையில் இருந்த இளைஞர் குழுக்களுக்கிடையிலேயே இந்த கைகலப்பு ஏற்பட்டதாக தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### வவுனியாவில்...

வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்தக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஏழு நலன்புரி நிலையங்களில் 'தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று திருநாவற்குளம், தாண்டிக்குளம், பூந்தோட்டத்தின் சில பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மாவட்டத்தின் வெள்ளப்பாதிப்பினால் 189 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இதில் செட்டிகுளப் பிரதேச செயலர் பிரிவில் 167 குடும்பங்களும், வவுனியா தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் 22 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன. செட்டிகுளம், பிரதேச செயலர் பிரிவில் கிறிஸ்தவகுளம் முதலியார்குளம், ஆண்டியா .புளியங்குளம், கந்தசாமிநகர், மீடியாபாம் கிராம மக்களும், வவுனியா தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் அக்போபுர, மாமடுவ, விக்கிரமபுர, களுகன்னபுர ஆகிய கிராம மக்களும் இடம்பெயர்ந்து நலனபுரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஏ-9 வீதியிலுள்ள நொச்சிமோட்டை பாலத்தை மேவி மூன்றடிக்கு மேலாக வெள்ளம் பாய்வதனால் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை கிளிநொச்சி, யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து தடைப்பட்டது. எனினும் மாலைவேளை வெள்ளம் குறைந்ததனால், போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. ஏ-9 வீதியில் சாந்தசோலை சந்தியிலிருந்து கொக்குவெளி மற்றும் நொச்சிமோட்டைப் பாலம் வரையான பகுதிகள் கடுமையமான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. (160)



கிளிநொச்சி இரணைமடுக் குளத்துக்கான நீர் வரத்து அதிகரித்துள்ளதனை அடுத்து நீரை வெளியேற்றும் வகையில் 10 வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதைக் காணலாம். (29)

## சுவர்க்கவாயில் ஏகாதசி


(பருத்தித்துறை)

வடமராட்சி வரலாற்றுப் புகழ பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம் இன்று திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

இன்று மாலை முதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை 4 சாமங்களும் விசேட அபிஷேகமும் பூசை என்பன நடைபெற்று ஏகாதசிப் புராணம் படிக்கப்பட்டு பயன் சொல்லப்படும்.

செவ்வாய்க்கிழமை அதிகாலை விரத பாறனை நடைபெறும் என தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (109)

## வெள்ளத்தில் மூழ்கியுள்ள குஞ்சுக்குள கிராம பாதைகள்



மன்னார் மாவட்டத்தின் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் கிராமத்திற்குச் செல்லும் பிரதான பாதைகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.றியாஸ் தெரிவித்தார். இந்நிலையில், குஞ்சுக்குளத்திற்கான தரைவழிப்பாதை முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளதுடன், குஞ்சுக்குளம் தொங்கு பாலத்தடியின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார். குஞ்சுக்குளம் பிரதான துருசின் நீர்மட்டம் 14.2 அடி அளவிற்கு உயர்ந்துள்ளது. இப்பாதைகளில் வெள்ளம் பாய்ந்து ஓடுவதினால் வீதிகளில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## நலன்புரிச் சங்கத்தின் ஒளிவிழா

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் நடத்தும் ஒளிவிழா இன்று திங்கட்கிழமை காலை 11.00 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தி.வரதராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையைக் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய அருட்தந்தை எமில்ட்போல்ட் அடிகளாரும், கட்டைவேலி மெதடிஸ்த தேவாலய போதகர் அருட திரு எஸ்.டபிள்யூ.தேவகுமார் அடிகளாரும் உடுப்பிட்டி தென்னிந்தியத் திருச்சபையின் போதகர் அருட்திரு எம்.பி.ஜெபநேசன் அடிகளாரும், வழங்கவுள்ளனர்.

வரவேற்புரையை கரவெட்டிப் பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உதவியாளர் அ.ஜெயசுதாஸ், வழங்கவுள்ளார். இந்நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, கிராம அலுவலர் ரஞ்சிதா றிச்சேட் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். குறித்த திருச்சபையின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. (116)

### மழையுடன்...

3116 வீடுகள் முற்று முழுதாக சேதமடைந்துள்ளதாகவும், 7694 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மையம் அறிவித்துள்ளது. சீரற்ற காலநிலையினால் நாட்டின் 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

### ஹலோறஸ்ட்...

பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.சி.எம்.மொஹமட் ஜெப்ரி தெரிவித்தார். இது தொடர்பான விசாரணையை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காலாவதியான தெரிவுக்குழுவிற்கு உத்தரவிடுவதில் அர்த்தமில்லை

## கூறுகிறார் அமைச்சர் ராஜித



(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது விசாரணை அறிக்கையை சபாநாயகரிடம் கையளித்துள்ளதுடன் தெரிவுக்குழுவும் காலாவதியாகிவிட்டது. என அக்குழுவில் அங்கம் வகித்த ஆளுங்கட்சி உறுப்பினர்களில் ஒருவரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரிக்கும் நியாயாதிக்கம் தனக்கு இருப்பதாகத் தெரிவித் துள்ள கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவையும் தெரி வுக்குழு அங்கத்தவர்களையும் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதே என்று ஊடகவியலாளர் அமைச்சரிடம் வினவினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, அரசியலமைப்பின் பிரகாரமும் நிலையியல் கட்டளைகளுக்கு அமைவாகவுமே நாடாளுமன்ற தெரிவுக குழு அமைக்கப்பட்டது.

அரசியலமைப்பின் பிரகாரம் தெரிவுக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு மாதகால வரையறைக்குள் அக்குழு அறிக்கையை சபாநாயகரிடம் கையளித்து விட்டது. அதற்கு பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சபாநாயகரே தீர்மானிப்பார். குற்றப் பிரேரணையை விசாரித்த தெரிவுக்குழு காலாவதியாகிவிட்டது. அக்குழுவுக்கு உத்தரவிடுவதில் எவ்விதமான அர்த்தமும் இல்லை என்றார்.

# எலும்புக்கூடுகளின் பாகங்கள் வெளிநாட்டு ஆய்வு கூடத்திற்கு

மாத்தளை வைத்தியசாலை வளாகத்திலுள்ள மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் பாகங்களை வெளிநாட்டிலுள்ள இரசாயன ஆய்வுகூடமொன்றுக்கு அனுப்பிவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த எலும்புக்கூடுகள் எந்தக் காலப்பகுதிக்குரியன என்பது தொடர்பில் உரிய ஆதாரங்களை திரட்டுவதே இதன் நோக்கம் என மாத்தளையில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுவரும் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்தார்.

இதன்மூலம் இந்த எலும்புக்கூடுகள் எந்தக் காலத்திற்குரியவை என்பதை சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்த முடியும் என பேராசிரியர் சுட்டிக்காட்டினார். மாத்தளை சட்ட வைத்திய அதிகாரியின் வேண்டுகோளுக்கு அமைய நீதிமன்றம் வழங்கிய உத்தரவை அடுத்து பேராசிரியர் ராஜ் சோமதேவ மனித புதைகுழி அமைந்துள்ள இடத்தில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது மண்டையோடு உட்பட 46 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# குற்றச் செயல்களின் எண்ணிக்கை நாட்டில் உயர்வடைந்துள்ளது

## குற்றம் சாட்டுகிறது ஜே.வி.பி.

நாட்டில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

இன மற்றும் மத ரீதியான மோதல்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் செயற்படக் கூடாது என தெரிவித்துள்ளது.

பொதுவாக நாட்டில் வாழும் சகல மக்களும் பாரிய சமூக பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் மீண்டும் இன அல்லது மத முரண்பாடுகள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒரு புறத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் மறு புறத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமைகளில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளதாகவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் சகல இன சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என வலியுறுத்தியுள்ளது.

இன முரண்பாடுகளை பயன்படுத்தி காலனித்துவ நாடுகளும் ஏனைய வெளிநாட்டு சக்திகளும் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களிலும் இந்த நிலைமை நீடித்ததாகவும், இந்திய இராணுவத்தினர் இலங்கையில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டமைக்கும் பிரிவினைவாதமே காரணம் எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

உண்மையான பிரச்சினைகளை மூடி மறைத்து இன அல்லது மத முரண்பாடுகளை தூண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதனை அனைத்து மக்களும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது அவசியமானது என ஜே.வி.பி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மாத்தளையில் பொழிந்த சிவப்பு, மஞ்சள், மீன் மழை

மாத்தளை மாவட்டத்தில் நாவுல பிரதேசத்திலுள்ள மூன்று கிராமங்களில் சிவப்பு, மஞ்சள், மீன் மழை பெய்ததாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். நாவுல பிரதேசத்தில் வீ ஹேனட்ட கிராமத்தில் மஞ்சள் மழையும், பன்னம்பிட்டிய கிராமத்தில் சிவப்பு மழையும், திகுனல கிராமத்தில் மீன் மழையும் பெய்துள்ளது. நேற்றுக் காலை 10.20 மணிமுதல் 10.45 மணிவரையே இவ்வாறு மழை பெய்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர். இவ்வருடத்தில் இலங்கையில் என்றுமில்லாதவாறு சிவப்பு, மஞ்சள் மழை மற்றும் மீன் மழையும் பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தம்பனைக்குளம் கிராம மக்கள் பாதுகாப்பான இடத்தில் தங்கவைப்பு

மல்வத்துஓயா பெருக்கெடுத்ததால் மன்னார் மாவட்டத்தின் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தம்பனைக்குளம் கிராம மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறியுள்ளனர்.

மல்வத்துஓயா பெருக்கெடுத்ததால் தம்பனைக்குளம் கிராமம் வெள்ளத்தில் மூழ்கும் சாத்தியம் காணப்படுவதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.றியாஸ் தெரிவித்தார்.

இந்நிலையில், தம்பனைக்குளம் கிராமத்திலுள்ள சுமார் 336 குடும்பங்களைச் சேர்ந்த 1,157பேர் பாதுகாப்பாக வெளியேறியுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை மடு உதவி அரசாங்க அதிபர் எப்.சி. சத்தியசோதி மேற்கொண்டார். அத்துடன், தம்பனைக்குளம் கிராமத்திற்கு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை மற்றும் பிரஜைகள் குழுவின் உறுப்பினர்களும் சென்று நிலைமைகளை பார்வையிட்டனர்.

# குடிவரவு, குடியகல்வு சட்டத்தில் ஏப்ரல் மாதத்தில் திருத்தம்

தற்போது நடைமுறையில் உள்ளதும் 1948ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதுமான குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களில் பாரிய மாற்றங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த மாற்றங்கள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதமளவில் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த புதிய முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம். சட்ட விரோத குடியேறிகளின் நடவடிக்கைகளை மட்டுப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அவுஸ்ரேலியாவிற்கு சட்ட விரோதமாகச் செல்லும் இலங்கையர்களை கட்டுப்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த வரைவு தற்சமயம் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட நிலையில் சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய வரைவிற்கு அமைய, நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களில் 90 சதவீதமான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்



## திருமதி அருளம்பலம் மகேஸ்வரி

சரசாலை தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளம்பலம் மகேஸ்வரி நேற்று 23.12.2012 காலமானார். அன்னார் காலம் சென்ற அருளம்பலத்தின் (ஜயாதம்பி) அன்பு மனைவியும், அருந்தவராசா, அருட்செல்வம், அருட்குமரன், அருந்தவமலர், அமுதமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணசாமி, பரமேந்திரன், அனுசியா, விமலா, ரஜனி ஆகியோரின் அன்பு மாமியும், காலம் சென்ற தம்பிஜயா, தில்லைநாயகி, தெய்வநாயகி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பகல் 12.30 க்கு மருதடிப்பிள்ளையார் வீதி, நுணாவில் மேற்கு சாவகச்சேரியிலுள்ள அன்னாரது மகனின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மகன்மார், மகள்மார்.

மருதடிப்பிள்ளையார் வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(C/1772) தொ. இல.0779439546

# கைதான சீனப்பிரஜைகளுக்கு 10ஆம் திகதிவரை விளக்கமறியல்



இணையத்தின் ஊடாக பண மோசடியில் ஈடுபட்டமை தொடர்பில்கைது செய்யப்பட்ட 100 சீனப் பிரஜைகளும் அடுத்த மாதம் ஏழாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சீனாவினால் செய்யப்பட்ட முறைப்பாடொன்றின் அடிப்படையில், இணையத்தளம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட சீன நாட்டவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். குறித்த 100 சந்தேகநபர்களும் இலங்கையில் இருந்தவாறு இணையத்தளத்தைப் பயன்படுத்தி சீன அரச வங்கிகளின் பணத்தை மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு உதவியாக சீனாவில் இருந்து விசேட குழுவொன்றும் இலங்கை வந்திருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# வீதி புனரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தட்டுவன்கொட்டி கிராமத்துக்கான பிரதான வீதி 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

குறித்த பிரதான வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் மிகமோசமாக சேதமடைந்து காணப்பட்டதுடன் இதனால் போக்குவரத்துக்கள் பெரும சிரமத்தின் மத்தியில் இடம் பெற்றுவந்தது.

இந்நிலையில் இவ்வீதியை புனரமைத்து தருமாறு பலராலும் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இவ்வீதி தற்போது புனரமைக்கப்படவுள்ளது. (கே)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.